357

பாசரசு



208421

சவரன் பொன்
நகைகளுக்கும்
தோஷமில்லாத
முதல்தரம்
வைரங்களுக்கும்
அசல் வெள்ளி
சாமான்களுக்கும்
வீகம்ஸீ
ஸ்தாபிதம் 1893
VEECUMSEE CHABILDOSS & SONS.,
RENOWNED JEWELLERS & DIAMOND MERCHANTS
CHINA BAZAAR ROAD....MADRAS.

கல்கி

357/4-45
17 NOV 1945
MADRAS

பாசரசு : 12

பதிப்பாசிரியர்கள் :
ஸ்ரீமதி சரசுவதி பாசு
எம். எஸ். பாசு (பாசரசு)

பாசரசுபிரசுரம்

பாசரசு காரியாலயம்
பெரம்பூர் :: சென்னை

இந்த இதழில்

208421
சென்னை-600 008

		பக்கம்
கல்கி	“ சு[illegible]	3
ரிக்ஷாக்காரன்	அ. [illegible]ப்பாவு	6
சொக்கி	ஸ்ரீமதி சரசுவதி பாசு	9
பிரிவு	ஸ்ரீமதி விசாலம்	15
சந்திரன்	“ எம்மெஸ்பி ”	22
தந்திரம் பலித்தது	வி. எஸ். வெங்கடேசன்	27
வைரம் எங்கே?	“ கிச்சு ”	37
பெயர் மாற்றம்	கே. ஸ்ரீ.	47
விளக்கு	“ பாசரசு ”	62

எல்லா உரிமைகளும் பதிப்பாசிரியர்களுக்கே

அணா 12

கட்டுரைகளில் வெளியாகும் அபிப்பிராயங்களுக்குப் பதிப்பாசிரியர்கள் பொறுப்பல்ல!

Printed at Commercial Printing & Publishing House, G. T. Madras
P. I. Card Q. H. No. 120. For Basaras Karyalayam P. I. Card
Q. H. No. MS 409—10-45.

17 NOV 1945
MADRAS

"சுபா"

மாயவரத்து முனிஸிபல் ஹைஸ்கூல் எஸ். எஸ். எல். ஸி. வகுப்பில் ஒருநாள் திடீரென்று 'வந்தே மாதரம்' என்ற கர்ஜனை வானைப் பிளந்தது. வேறு யாருமில்லை, கல்கி தான் இவ்வாறு கத்தினார். காங்கிரஸ் புரட்சியில் கலந்து கொண்ட மாணவர்களுக்குத் தலைவராகிக் கல்கி பள்ளிக் கூடத்தைப் பகிஷ்காரம் செய்தார். அந்தக் காலத்திலேயே அவருக்குத் தேசத்தொண்டில் அலாதியான மோகம்.

காங்கிரஸ் கூட்டங்களில் மேடைமீதேறி தேசிய கீதம் பாடினார். இவர் உணர்ச்சியுடன் பாடும் வேகத்தைக் கண்டு, டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் அவர்கள் 'சபாஷ்' என்று சொல்லி கல்கியைத் தட்டிக் கொடுத்தார்.

காங்கிரஸ் துண்டுப் பிரசுரங்கள் எழுதுவதில் கல்கி கைதேர்ந்தவர். இத்துண்டுப் பிரசுர சாமர்த்தியத்தினால் திருச்செங்கோட்டில் ராஜாஜி நடத்திவந்த 'விமோசனம்' என்ற பத்திரிகையில் சேவை செய்ய 'கல்கி'க்கு சந்தர்ப்பம் கிடைத்தது. 'விமோசனம்' மதுவிலக்குப் பிரசாரப் பத்திரிகை. கொஞ்ச நாளில் அரசாங்கத்தார் விமோசனத்தின்மேல் சீற்றங்கொண்டு அதற்கு ஒரு மூடுவிழா செய்து விட்டார்கள். அதனால் கல்கிக்கு விமோசனத்தை விட்டு வெளியேறுவதைத் தவிர வேறு விமோசனம் இல்லாமல் போய்விட்டது.

'சபாஷ்' என்று தட்டிக் கொடுத்த டாக்டர் ராஜன் அவர்களிடம் கல்கி சென்றார். ராஜன் கல்கியைத் திரு. வி. க. அவர்களிடம் ஒரு சிபார்சுக் கடிதத்துடன் அனுப்பினார். கல்கி நவசக்தியில் பேனாபிடித்து 'தமிழ்த் தேனீ' என்ற புனைப் பெயரில் எழுதி வந்தார். கல்கிக்கு நவசக்தியில் இருப்புக் கொள்ளவில்லை. அரசியல் துறையில் ஏதாவது எழுத வேண்டுமென்று அவர் கை துடித்தது. நவசக்தியை விட்டு ஆனந்த விகடனை அடைந்தார். இங்குதான் கல்கி பிராபல்யம் அடைந்தது.

தமிழ்ப் பத்திரிகைகளில் சங்கீதப் பகுதியைப் புகுத்தியவரும் அதை ரஸிகர்கள் ஆவலுடன் படிக்கக் கூடிய நடையில் எழுதியவரும் கல்கிதான். 'கர்நாடகம்' என்ற புனைப் பெயரில் ஒளிந்து கொண்டு இந்தச் சேவைசெய்து, எத்தனையோ சங்கீத கலாமணிகளுக்கு உற்சாக மூட்டி அவர்களைக் கைதூக்கி விட்டார். தமிழிசையை முன்னணிக்குக் கொண்டு வந்து எல்லோரும் தமிழில் பாட வேண்டும் என்ற ஆவலை உண்டாக்கியவர் கல்கிதான்.

கல்கி தம் தேசத்திற்காக மூன்று முறை சிறைசென்றிருக்கிறார். 1942-ல் தனிப்பட்ட முறையில் சத்தியாக்கிரகம் செய்ய பிரியப்பட்டார். ஆனால் எஸ். எஸ். வாசன் அவர்கள் அதற்கு அனுமதிகொடுக்க மறுத்து விட்டார். கல்கி தன் வேலையை ராஜிநாமா செய்துவிட்டு சத்தியாக்கிரகம் செய்து, மூன்று மாத சிறைவாசம் அனுபவித்தார்.

தம் வாழ்க்கையில் தமக்குச் சொந்தமான ஒரு தமிழ் பத்திரிகைக்குத் தாமே ஆசிரியராக இருக்கவேண்டு

மென்று வெகு நாளாகக் கல்கி கனவு கண்டு வந்தார். கடைசியாகச் சிறைவிட்டு வெளியேறியதும் 'கல்கி' யை ஆரம்பித்தார்.

அரசியல், பொருளாதாரம், சங்கீதம் முதலிய எல்லா விஷயங்களேயும் குழந்தைகளும் புரிந்து கொள்ளும்படி யான ஒரு கவர்ச்சியான, தெளிவான நடையில் எழுதும் ஆற்றலை யுடையவர் கல்கி.

கல்கியின் எழுத்தின்மேல் திரு. டி. கே. சி. அவர் களுக்குக் காதல் உண்டாயிற்று. அவர் கல்கியுடன் நின்று ஒத்துழைத்து வருகிறார்.

ராஜாஜியின் ஆசி இருக்கவே இருக்கிறது. இவருக்குக் குறை என்னவிருக்கிறது? கல்கிக்குப் பாரதியாரிடம் அதிக மதிப்பு. பாரதியாரைத் தமிழர் மறந்துவிடக் கூடாதென்று எட்டயபுரத்தில் பாரதியார் கோயிலைக் கட்டும் பணியை ஏற்றுக் கொண்டார்.

ஏட்டிக்குப் போட்டி, சாரதையின் தந்திரம், கணே யாழியின் கனவு, கள்வனின் காதலி, தியாக பூமி, மகுட பதி, பார்த்திபன் கனவு, சிவகாமியின் சபதம் முதலிய அருமையான புத்தகங்களே எழுதியிருக்கிறார். இவற்றில் கள்வனின் காதலி, தியாக பூமி, பார்த்திபன் கனவு, சிவகாமியின் சபதம் தமிழர்களின் மனதை அபகரித்து விட்டன. கல்கியைத் தெரியாத (எழுத்தில்) தமிழன் இல்லை என்று சொன்னால் மிகையாகாது!

கல்கியின் உண்மைப் பெயர் திரு. ரா. கிருஷ்ண மூர்த்தி.

கல்கி நீடூழி வாழ்க!

ரிக்ஷாக்காரன்

அ. அய்யாவு B.A. B.T.

கூடிவாழ்ந்த ஊர்களிலே கூலிவேலைத் தொல்லை
குடியிருக்கப் பட்டணத்தில் குடிசைகூட இல்லை
தேடிவந்த எங்களுக்குத் தெருக்களிலே வீடு
தினமும் உண்டு வாழுவதே தீராப்பெரும் பாடு.

நஞ்சைவேலை புஞ்சைவேலை நடவுபயிர் நட்டோம்
நகரத்துக்கு வந்து எச்சில் நாய்கள் போலக் கெட்டோம்
பஞ்சை நூற்று மானம் நோற்று பட்டிகளில் வாழ்ந்தோம்
பட்டணத்தில் வண்டிதள்ளி பலம் குறைந்து தாழ்ந்தோம்

மாடுபூட்டி ஏரை ஓட்டி வயல்களிலே உழுதோம்
மாடுபோல ரிக்ஷா தள்ளி மார்பு வலிக்க அழுதோம்
ஓடி ஓடிக் கால்கள் தேய்ந்து உடல் எலும்பாய் ஆனோம்
உடுக்கக்கூட கந்தையில்லை உரிய மானம் போனோம்.

தெருத் தெருவாய் ஓடுகின்ற சாக்கடையினாலே
தீய நாற்றம் தடுத்து நிற்கும் திட்டுக்களின் மேலே
வருத்தமுடன் அடுப்பை ஏற்றி வயிறு காக்கும் வேலை
மனைவிமக்கள் சேர்ந்து நாங்கள் மடிகிறோம் இக்காலை.

விறகில்லாமல் சருகுவைத்து விடிய விடிய ஊதி
விதியில்லாமல் கூழ்குடித்து மெலிகிறோம் அநீதி
சிறகில்லாத குருவிபோல சீவனத்தை நாடி
செத்த பிணத்தை ஒத்து நாங்கள் திரிகிறோம் மிகவாடி

பணம் படைத்தோர் எமைத் திரும்பி பார்த்திடாமல்
செல்வார்
பாவம் முன்னே செய்தோம் கஷ்டப் படுகிறோம் எனச்
சொல்வார்
குணம்படைத்தோர் மதிபடைத்தோர் குயுக்தி பேசல்
நன்றே
குடியும் வாழ்வும் பொருளிருந்தால் கூடிப்பெருகும்
அன்றே!

தினமும் வண்டி இழுத்து நாங்கள் சேகரிக்கும் கூலி
திருப்பி எண்ணிப் பார்க்கு முன்னே தீர்ந்து போகும் 'காலி'
தனமும் தகுந்த தொழிலிருந்தால் சமூக வாழ்வில் நீங்கி
தக்க நாகரீக மெல்லாம் சாரும் கவலை நீங்கி.

சினிமா சர்க்கஸ் ஆட்டம் பார்க்கத் திரண்டு போகும்
கூட்டம்
திரும்பத் திரும்பத் தினமும் சென்று செய்கின்றார் ஆர்ப்
பாட்டம்
அனியாயமாய் வம்பு வழக்கில் ஆயிரத்தைத் தொலைப்பார்
ஐயோ! எமக்குக் கூலிகேட்டால் அடிவயிற்றில் அடிப்பார்

வாடகைக்கு வண்டி வாங்கி வலிய இழுத்துத் தள்ள
மண்டை வெடிக்க, வயிறுகடிக்க, மார்புதுடிக்க, துள்ள,
கோடை வெயிலில் 'தார்ரஸ்தாவில்' குன்னிக்குன்னி ஓடி
குடல் தெறிக்க உடல் முறிக்க குலையுறோம் திண்டாடி,

உழைத்துப் பிழைக்க வந்த நாங்கள் உயிரை எல்லாம் விட்டு
ஒட்டி உலர்ந்து வற்றி மெலிந்து உருகி உடலும் கெட்டு
களைத்துச் சளைத்து இளைத்து இருமல் காசநோயால் கருகி
காலம் கழிக்கச் சாகவிதித்தான் கடவுள் கருணை பெருகி!

நல்ல இடத்தில் வீடுகட்டி நாங்கள் வாழவேண்டும்,
நாற்ற மில்லா ஊற்று ஜலத்தில் நாங்கள் குளிக்கவேண்டும்
சொல்ல வாயும் கூசுதையோ, சுத்தம் ஏனோ இல்லை?
சூழ்நிலையும் சுற்றுப்புறமும் சுத்தமாக இல்லை.

சென்னை நகரில் சேரி ஓரம் சேர்ந்து வாழும் தொல்லை
தெருவில் மழையில் வெளியில் ஒண்டத் திண்ணைக்கூட இல்லை
என்ன கொடுமை! தண்ணீர் குடிக்க ஏற்ற வசதி இல்லை
எதிரே கக்கூஸ் நீர்க்குழாயில் இரண்டுவேலைத் தொல்லை.

ஒருவர் மலத்தைக் கழிக்கும்போது ஒருவர் குடிநீர் பிடிக்க
ஒருவர் உடையைத் துவைக்கக் கதவை ஓடிவந்து இடிக்க
சிறுவர் பெண்கள் குளிக்க வசதி சிறிதுகூட இல்லை
சென்னை நகர சபையும் எங்கள் சிரமம் தீர்க்கவில்லை.

யாரிடத்தில் சொல்லி நாங்கள் அழுது தொலைத்துச்
சாவோம்!
அன்புகொண்டோர் இருந்தா லன்றோ அவரிடத்தில்
போவோம்,
வேறிடத்தில் சொல்லு முன்னே வேலைவந்து சேரும்.
விதியோ! நாங்கள் விலங்கோ! கொஞ்சம் விளக்கி எண்
ணிப்பாரும்.

16—வது வாரம்!

ஸ்ரீ ராம பால கான விநோத சபாவின்

திருமழிசை ஆழ்வார்

தினசரி நாடகம்

சென்னை மவுண்ட் ரோட்
நியூ தியேட்டரில்....

P.S.N.Co

சனி, வியாழன் இரவு—9-30 மணிக்கு
மற்ற நாட்களில் மாலை 6-30க்கு

சொக்கி

ஸ்ரீமதி சரசுவதி பாசு

அவனுடைய அந்தச் சிறு குடிசை காவிரிக்கரையோரத்தில் 'ஜம்' மென்று அமைந்திருந்தது. ஆடிப் பெருக்கு நொங்கும் நுரையுமாக ஆற்றைக் கவ்விக் கொண்டு ஓடியது. ஆற்றுக்கும் குடிசைக்கும் அருகிலேயே அவனுடைய செழிப்புற்ற வயற் காடு இருந்தது. அது பார்ப்பவர் கண்களுக்கு வெகு ரம்மியமாய்க் காட்சி அளித்தது.

மாலை நேரத்து மங்கிய வெளிச்சத்திலே குடிசையின் வாயிலில் உட்கார்ந்தபடியே தான் கஷ்டப்பட்டு உழுது விரைத்த அந்தப் பயிரின் செழுமையைக் கண் குளிரக் கண்டு சந்தோஷித்தான் அந்தக் குடியானவன். ஒரு மாடு பயிரை மேய்வது அவன் கண்களில் பட்டது. எழுந்து ஒரு பெரிய கழியுடன் வயலை நோக்கி இரண்டுதாண்டாக ஓடினான். இவன் ஓடி வருவதைக் கண்ட மாடு வேகமாக ஓடிவிட்டது. செங்கதிர்கள் நன்றாக முற்றி அறுவடையாக வேண்டிய சமயத்தை அடைந்திருந்தன. நெற் கதிர்கள் பாரம் தாங்காமல் சாய்ந்திருந்த காட்சி தனக்கு மரியாதை செலுத்த வணங்கி நிற்பதாக அந்தக் குடியானவன் சுப்பன் கற்பனை செய்து கொண்டான். பிறகு அதிகப் பெருமையுடன் அவன் அந்த பயிர்களுடன் பேசினான். "இன்னைக்கு உங்கள் ஆயுசுக்குக் கடைசி நாள். நாளை சூரியோதயத்துக்கு முந்தியே உங்களை அறுவடை செய்ய ஆரம்பிப்பேன். நாளையே நீங்கள் இந்த வயற் காட்டை விட்டுக் களத்து மேட்டுக்குப் போகணும்," என்று வாய் விட்டுச் சொன்னான். தன் மேல்துண்டை விரித்து வரப்பின் மேல் போட்டு உட்கார்ந்தான். அவன் மனதில் பல எண்ணங்கள் அலைகளாகக் கொந்தளிக்க ஆரம்பித்தன.

* * *

சந்திரோதயமும், காற்றின் இன்னிசையும், ஆற்றின் சலசலப்பும் அவன் மனதில் கிளர்ச்சியை உண்டு பண்ணின. அவனுக் குண்டான மகிழ்ச்சியில் சந்திரனைக் கூடப் பழிக்க வேண்டும் போல் தோன்றிற்று. அவன் சந்திரனைப் பார்த்துத் தனக்குள்ளேயே நினைக்கலானன். "சந்திரனே, நீ அழகில் சிறந்தவன்னு பெருமைப் படறியா? அப்படி நீ பெருமை படறது உனக்குப் பொருந்தாது. உன்னை அழகில் தோற்கடிக்கும் படியான அவ்வளவு அழகுடன் என் அக்கா மக ஒருத்தி இருக்கிறு. அவ கூடிய சீக்கிரத்திலே என் மனைவியாகப் போகிருள்," என்று சொல்லிக் கொண்டான்.

அவனுக்கு வீட்டில் வேறு திக்கில்லை. அவன் மாலைப் பொழுதில் யாருடன் பேசுவது? அவன் மனோபாவங்களை வெளியிடச் சந்திரன் ஒருவன்தான் அகப்பட்டான். அண்டை அயலாரிடம் தன் மனதைத் திறந்து காட்ட வெட்கப்பட்டான். ஆகையால், பொங்கிக் குமுறிக் கொண்டு வரும் தன் ஆசைகளைக் பதில் சொல்லச் சக்தி யற்ற சந்திரனிடம் சுப்பன் கொட்டி அளந்தான்.

"மொத மொதல்லே நான் ஒரு தொழிற்சாலையிலே கூலி வேலை செய்து வந்தேன். என் சாப்பாடு செலவு போக மீதியை யென் கூட்டாளிகளோடே சேந்து குடிச் சும் சூதாடியும் தொலைத்து வந்தேன்.

"எனக்குக் கலியாணம் செய்துகொள்ள வயது வந்ததும் யென் கூட்டாளிங்களெல்லாம் கலியாணம் செய்து கிட்டுக் கொழந்த குட்டிகளோடு வாழ்ந்து வந்தாங்க. எனக்கும் கலியாணம் செய்துகொள்ளணும்னு ஆசை உண்டாச்சு. யென் கலியாணத்தைப்பத்தி யோசிக்க அக்கா வீட்டுக்கு போனேன். அங்கே யென் அக்கா மகளைக் கண்டு அவ அழகிலே மயங்கிட்டேன். அவ பெயரு சொக்கி. என்னைக் கலியாணம் செய்துகொள் ளும்படி அவளை வேண்டிக்கினேன்.

"சொக்கி கெட்டிக்காரி. அவ ஒரே பேச்சா, "கையாலாகாத ஒன்னை நா கட்டிக்கொள்ளமாட்டேன். நீ எப்போதும் குடிச்சுக்கொண்டிருக்கியாமே! ஒன்னேடு

கா யெப்படி காலந்தள்ளுவேன், மச்சான்!''ன்னு சொல்லிட்டா. நான் அவளைக் கெஞ்சினேன். கடைசியாக அவ மனம் குளிர்ந்து யென்மீது கிருபை வைச்சா. ''ஏதாவதொரு கிராமத்துக்குப் போயி உழுது பயிரிட்டு சம்பாதிச்சு அந்தப் பணத்தைக் கொண்டுவந்து யென்னிடம் கொடுத்தா ஒன்னை மணந்துகொள்ளுறேன்னு'' சொன்னு.

''அதனாலேதான் முன்பின் தெரியாத இந்த கிராமத்திலே சொக்கியின் மனதைத் திருப்திசெய்ய அரும்பாடு பட்டுப் பயிர் செய்திருக்கேன். என் ஆசையெல்லாம் முக்கால்வீசம் கைகூடிவிட்டாப்போல்தான்''......... என்று சுப்பன் சொல்லிக்கொண்டே போனபொழுது சந்திரன் மேகத்தில் மறைந்தான்.

''என்ன, உன்னைவிட அழகா ஒருத்தி இருக்கிறுன்னு சொன்னதுக்கா இப்படி கோவிச்சுக்குன்னு ஓடி ஒளிஞ்சுகிட்டே ?'' என்று சுப்பன் கேட்டான்.

திரள் திரளாக வந்த மேகங்கள் ஒன்ருகக் கூடி சந்திரனை நன்ருக மறைத்துவிட்டன. உலகத்தை ஒரு கருப்புப் போர்வையால் மூடிவிட்டதுபோல் காணப்பட்டது. சுப்பன் தன் முதுகைத் தடவிப் பார்த்தான். அதற்குக் காரணமில்லாமலில்லை. அவன் முதுகில் ஏதோ விழுந்ததுபோலிருந்தது. ஆமாம், ஒரு தூறல்தான் அவன் முதுகில் விழுந்தது. சுப்பன் எழுந்து குடிசையை நோக்கி நடந்தான். தூறல் ஒன்றிரண்டாக போட்டது. சுப்பன் மனம் பதறியது. அவன் பக்கத்துக் குடிசைக்கு ஓடினான்.

''என்ன அண்ணே, மழை சதி செஞ்சிடும்போல இருக்குதே!'' என்ருன்.

அண்டைவீட்டுக்காரன் வெளியேவந்து ஆகாயத்தை நாலாபக்கமும் பார்த்துவிட்டு, ''நீ ஒண்ணும் பயப்படாதே, எல்லா பாரத்தையும் மாரியம்மன்மேலே போட்டுடு. அவ கிட்டே இருந்து எல்லாம் தொணே செய்வா. முன்னே ஒருதடவை எனக்கு ஒரு பெரிய ஆபத்து வந்தது. அப்போ இந்த தெய்வந்தான் என்னைக் காப்பாத்துச்சு.........'' என்று தன் பழைய கதையை ஆரம்

பித்தான். சுப்பனுக்கு வேதனை அதிகரித்தது. பக்கத்துக் குடிசைக்காரனுடைய பழைய சம்பவங்களைக் கேட்டுக் கொண்டிருக்க இதுவா சமயம்? அவனுக்கு இது கொஞ் சங்கூடப் பிடிக்கவில்லை. "இரு, அண்ணே, அந்தக் கதை யெல்லாம் நாளைக்குக் கேக்கறேன்," என்று சொல்லிக் கொண்டே கோடியிலிருந்த குடிசைக்கு ஓடி அங்கு உட் கார்ந்திருந்த கிழவரைப்பார்த்து, "என்ன, தாத்தா, இன் னைக்கு மழை பெய்யுமா? பஞ்சாங்கத்திலே ஏதாவது குறிச்சிருக்கா?" என்று ஆவலோடு கேட்டான்.

"யாரு? சுப்பனா! வாப்பா, வா, உட்காரு. மழையைப் பத்திய அவசியம் உனக் கிப்போ என்ன வந்திடுத்து?"

"அதுதான் தாத்தா. நாளைக்கு அறுவடை செய்ய ணும். கதிரெல்லாம் முத்தித்தலை சாஞ்சி போச்சு. இந்தச் சமயம் பாத்து இந்த எழவு மானம் இருட்டிக்கிச்சே," என்று சுப்பன் அங்கலாய்த்தான்.

"ஐயையோ, மானத்தைப் பாத்தா மனம் கலங் குதே! பாத்தியா, நான் அப்பவே சொன்னேன்; கல்லடி பட்டாலும் படலாம் கண்ணடி படக்கூடாதுன்னு சொன்னேன். இந்த ஊரான்க கண்ணெல்லாம் பட்டு தான் உன் பயிருக்கு அழிவு வந்துட்டுது. நான் அப்பவே பிடிச்சுத் தலையிலே அடிச்சி கிட்டேன், திருஷ்டிப் பானை ஒண்ணு அங்கே வையுன்னு; நீ கேக்கலே ......" என்றான் கிழவன்.

சுப்பன் மனதில் மட்டும் அமைதி ஏற்படாமல் சூறா வளி அடித்துக் கொண்டிருந்தது. சுப்பன் எழுந்து சோர்ந்த நடையுடன் குடிசைக்குப் போய் விளக்கேற்றி னான். பானையைக் கழுவி, அடுப்பை ஏற்றி உலை வைத்து, அரிசியைக் கழுவிப் போட்டு விட்டுப் சற்று படுத்தான். இன்னும் எத்தனை நாளைக்குத் தானே சமைத்து சாப்பிட வேண்டும் என்று யோசித்தான். அவனுக்குத் சொக்கியின் நினைவு வந்தது. அவளுடைய அன்பான மொழிகள் நினைவுக்கு வரவும் அவன் தனக்குள்ளேயே பூரித்தான்; சிரித்துக் கொண்டான். அவன் இப்படி யோசித்துக்

கொண்டிருந்த பொழுது கண்களைப் பறித்துப் போகும் மின்னல் ஒன்று தோன்றவும் எழுந்து உட்கார்ந்து வாசற் படி வழியாக வெளியே எட்டிப் பார்த்தான். ஒரே இருட்டாக இருந்தது. தூறல் பெரும் தூரலாக மாறியது. திரும்பவும் ஒரு மின்னல். மழை 'சோ' வென்று வந்து விட்டது. சுப்பன் மனம் தத்தளித்தது. அவன் கண் களில் இரண்டு கண்ணீர்த்துளிகள் கீழே விழத் தயாராக நின்று கொண்டிருந்தன. அவன் பயிர் அழிந்துபோவ தற்காக அவன் வருந்தவில்லை. ஆனல் சொக்கியின் ஆக்ஞையை ....

வாசற்படியின்மேல் தலையை வைத்துக்கொண்டு வெளியே பார்த்தபடியே படுத்துக்கொண்டான். அப்ப டியே அவன் தூங்கிவிட்டான். அடுப்பில் சாதம் வெந்து கொண்டிருப்பதை மறந்துவிட்டான். சாதம் வெந்து கூழாகப் போய்விட்டது. அடுப்பும் தானகவே அணைந்து விட்டது.

பொழுது விடிந்தது. ஆகாயம் வெளுத்துத் தெளிவாக இருந்தது. சூரியன் உதயமாகி ஒரு நாழிகை யிருக்கும். சுப்பன் கண் விழித்தான். கண் விழித்ததும் முதல் வேலை யாக வயல்பக்கம் திரும்பிப் பார்த்தான். அவன் கண்க ளுக்குப் பயிர் தெரியவில்லை. ஒரே தண்ணீர் மயமாக இருந்தது. அவன் அசந்து போய்விட்டான். எழுந்து வாசற்படியில் உட்கார்ந்து தாடைகளை இரு கைகளாலும் ஊன்றிக்கொண்டு யோசனை செய்தான். அவன் கண் களிலிருந்து கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது.

அவன் பயிர் முழுவதும் வெள்ளத்தில் மூழ்கிப் போயிற்று. ஒரு நெல் மணிகூடத் தேருது. சொக்கியின் மனதைத் திருப்திசெய்ய முடியாது என்று அவன் நினைத்தபொழுது அவன் உள்ளம் இரண்டாக வெடித்து விடும்போலிருந்தது. அவன் கண்களை மூடிக்கொண்டு யோசனையி லாழ்ந்தான்.

அவன் தோளை யாரோ தொட்டதுபோல் தோன் றிற்று. திடுக்கிட்டு கண்ணைத் திறந்து பார்த்தான். தொட் டது வேறு யாருமில்லை; சொக்கிதான்.

"நீ யேன் அழறே?" என்று கேட்டுக்கொண்டே உள்ளே சென்ருள் சொக்கி. அடுப்பின்மேல் பானையில் சோறு கூழாகிப் போயிருந்ததைப் பார்த்ததும், "என்ன மச்சான், ராத்திரி நீ சாப்பிடலையா?" என்று கேட்டாள்.

"சாப்பாடு வேறு எனக்கு வேண்டியிருக்கா, அதோ பாரு!" என்று தண்ணீரில் மூழ்கிக் கிடக்கும் வயற்காட்டைச் சுட்டிக் காட்டினன்.

"அது போனு போவுது மச்சான், நேத்துப் பேஞ்ச மழையிலே என்னவாச்சோன்னு அம்மாவும் நானும் காலிலேயே புறப்பட்டோம், அம்மா பின்னலே வரா," என்ருள் சொக்கி.

"நெல்லு போச்சு, இனி என் கதி!......" என்று சொல்லி சுப்பன் நிறுத்தினன்.

"என்ன மச்சான், நீ அப்படிப் பேசறே. நீ இந்த வேலையெ கத்துக்கணும்னுதான் நான் சொன்னேன். போனு போவுது. ஆனு நீ மட்டும் குடிக்கக் கூடாது. என்ன மச்சான் சொல்றே? உன்னதான் நான் ......" என்று சொல்லி வெட்கத்துடன் சொக்கி விலகி நின்ருள்.

இடிந்து போன சொக்கனின் முகத்தில் அப்பொழுது தான் புன்முறுவல் தோன்றிற்று.

பிரிவு

ஸ்ரீமதி விசாலம்

காட்சி 1

[குழந்தை வீரிட்டு அழுகிறது. ராசாத்தி குழந்தையை ஏணைபி லிட்டுத் தாலாட்டுகிருள்.]

கண்ணே என் கண்மணியே
கற்கண்டே கண்வளராய்
அப்பா சந்தைக்குப் போய்
அம்பிட்டும் வாங்கிடுவார்.

[அவள் கணவன் வீரன் குடிசையின் கதவைத் தட்டுகிருன்.]

வீரன் :—ராசாத்தி! ராசாத்தி! கதவைத் திறேன். எத்தனைதரம் கதவைத் தட்டுகிறது? உனக்குக் காது கேக்கலே?

ராசாத்தி :—[கதவைத் திறந்துகொண்டே] நீன்னு காதுக்குக் கம்மல்வாங்கி போட்டிருக்கியே. அந்த கம்மல் போட்டிருக்கும் காதுக்கு ஒடனே உன் பேச்சு கேக்குமா?

வீரன் :—இதானே உன் பொல்லாத்தனம் என்கிறது. நான் உனக்குக் கம்மல் போடலேனு குத்தி குத்தி எசிக் காட்றீயே. கொஞ்சநாள் பொறுத்துக்கோ. ஆண்ட கிட்டே எனக்கு இருபத்தஞ்சு ரூபா வேணும்னு கேட்டி ருக்கேன். அதற்கு ஐயா சொன்னரு, இந்த அறுப்பு எல்லாம் முடியட்டும்: கையிலே பணம் இல்லே, ரண்டு மாசம் பொறுத்துக்கோ; கட்டாயம் நீ கேட்டதைக் கொடுத்துடறேன்னு சொன்னரு. ஆன அதற்குள்ளே நீ என்மேலே கோவிச்சுகிறீயே!

ராசாத்தி :—என் மூஞ்செ பாத்துப் பேசு. நானு கோவமாவா இருக்கேன்? நீ காது கேக்கலேன்னு சொல்லவே சும்மானாலும் கோவிச்சுகிறமாதிரி சொன்னேன்.

வீரன் :—எனக்கு தெரியாதா ஒன் விசயம். நீ என் ராசாத்தி யல்லவா?

[வீரன் அவள் கிட்டே போகிறான்.]

ராசாத்தி :—இதோ பாரு! சும்மா இதான் ஒனக்கு. வேளே கீளே சமயம் ஒனக்குக் கிடையாது. செத்தே எட்டி அப்பாலே போ. குழந்தை இப்பத்தான் தூங்க ஆரம்பிச்சான்.

வீரன் :—என் ராசா, இப்படி என்மேலே எறிஞ்சி விழறே. ஆனா நீ என்ன செய்வே. ஒனக்கு வேலெ அதிகம். அதோடு குழந்தையையும் கவனிச்சுக்கணும். எங்க அம்மா இருந்தா.........

[வீரன் இறந்துபோன தன் தாயை நினைத்துக் கண்ணீர் விடுகிறான்.]

ராசாத்தி :—அம்மாவெ கொன்னுட்டு இப்ப நினைச்சுண்டு உட்காந்து அழு. பெத்த ஆத்தாளை கொல்ல யாருக்குத்தான் மனசு வரும்? உன்னைப்போல.........

வீரன் :—ஆமாம், என்னை என்ன செய்யச்சொல்றே? அந்த பாழும் கள்ளெ குடிச்சுட்டு கண்ணு மூண்ணு தெரியாமெ.........

ராசாத்தி :—இப்ப அதைப்பத்தி நினைச்சி என் வருத்தப் பட்றே? அந்த மவ ராஜாங்க காங்கிரஸ்காரரு இல்லாட்டா, நம் குடிசை இப்ப இப்படி இருக்குமோ? அந்த புண்யவான்களெ கையெடுத்து கும்பிட்டாலும் போதாது. நல்ல மனசு பண்ணி கள்ளு கடைங்களெ மூடினாங்களே?

வீரன் :—அதிருக்கட்டும். நான் என்ன வாங்கிவந்தேன், பாத்தியா? காலையிலே சொன்னியே, அந்த சேட் கடையிலே ஒரு ஜதை வெள்ளிக்காப்பு இருக்குதுன்னு.

அதை வாங்கி வந்துட்டேன். இந்தா! இதை எடுத்துக்கோ. இன்னிக்கி என்ன சமையல் பண்ணி இருக்கே?

ராசாத்தி:—[சந்தோஷத்தோடு வெள்ளிக் காப்புகளைப் பார்த்துக்கொண்டே] ஒனக்கிஷ்டமான கத்தரிக்கா பருப்பு குழம்பு, சிறு கீரை கூட்டுபண்ணி இருக்கேன். கையலம்பி கொண்டு சாப்பிடவா, நேரமாச்சு.

[ராசாத்தி சந்தோஷத்தோடு பரிமாறுகிருள். வீரன் அவள் அழகைப் பார்த்துக்கொண்டே சாப்பிடுகிருன்.]

காட்சி 2

[இடம்: களத்துமேடு. விளக்குவைக்கும் நேரம். பெரிய அம்பாரி நெல் குவிக்கப்பட்டிருக்கிறது. வீரன் முத்திரைப் பலகையால் முத்திரை வைத்துக்கொண்டு வருகிருன். அவனுடைய எஜமான் வீரனுடன் பேச்சு கொடுக்கிருர்.]

எஜமான்:—ஏண்டா வீரா! நீ கேட்ட ரூபா இப்பொழுதே வேண்டுமா? அல்லது பிறகு.........

வீரன்:—இப்பவேதான் வேணும் சாமி. வீட்டிலே இருக்கிருளே அவ தொந்தரவு பொறுக்க முடியல்லே. எப்படியாவது அவள் கேட்ட நகையெ வாங்கி......

எஜமான்:—அப்படி யென்ருல் நீ அவளுக்குப் பயப் படுகிரு யென்று சொல்லு. அதனுல்தானே நீ......

வீரன்:—எசமான்! எசமான்! அப்படில்லாம் தப்பா நினைச்சுக்காதிங்க. பெண்ஜாதி தொந்தரவுதானு? எனக்குந் தான் ஆசை எசமான். அவளுக்கு கம்மல் போட்டுட்டா என் ஆசை யெல்லாம் தீர்ந்திடும்.

எஜமான்:—சரிதான், வீரா. நேற்றுதான் கண்ணு சாமி, நெல்லுக்காக பணம் கொடுத்து விட்டுப் போனுன். இந்தா ரூபாய் இருபத்தஞ்சு. நல்லதா ஏமாருமல் கவனித்து வாங்கு.

[வீரன் அவர் காலில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்குகிருன். அன்றே ராசாத்தியின் காதில் கம்மல் பளிச் பளிச்சென்று மின்னுகிறது.]

காட்சி 3

[இரண்டு வருஷத்திற்குப் பிறகு. நிமிர்ந்து கம்பீரமாய் நின்ற ராசாத்தியின் குடிசை, ஒரு பக்கமாய்ச் சாய்ந்து குன்றி கிடக்கிறது. ராசாத்தி கவலையோடு பசியினால் அழும் தன் மூன்று வயது மகனை, ஆசுவாசப் படுத்துகிறாள். வீரன் கள் குடித்து விட்டு ஆடிக் கொண்டே வருகிறான்.]

வீரன் :—*ராசாத்தி! ராசாத்தி! ஏ கழுதே! என்ன செய்றே? இங்கே வா. என் ராசாத்தி என் கண்ணு, என் மூக்கு என் ராசா...... என் ராசா......* [ஆடிக் கொண்டே பாடுகிறான்.]

"என் ராசாத்திக்கு நானு தானே ராஜா

ராஜாவுக்கு ஏத்தராணி ராசாத்திதானே!"

[ராசாத்தி இதை பார்க்கப் பிடிக்காதவளாய் உள்ளே போய் விடுகிறாள். வீரன் ஆடிக்கொண்டே இருக்கிறான். அவன் வாயிலிருந்து கிளம்பும் கள் நாற்றம் வீடு பூராவும் வீசுகிறது. களைப்பு மேலிட்டவனாய் தொபீரென்று கீழே விழுகிறான்.]

ராசாத்தி :—கட்டேலே போறவன். கள்ளைக் குடிச்சி குடிச்சி குடும்பத்தெ பாழ்படுத்துறானே. காங்கிரஸ் காருங்க அரசாங்கம் போயிடவே, இந்த பாழுங் கள்ளு திரும்பியும் வந்து புத்தியை மாத்திடுச்சே. வாடா குழந்தே முனியம்மாவ கேட்டு கொஞ்சம் சாதம் உனக்குப் போடச் சொல்றேன்.

[ராசாத்தி தன் மகனைத் தூக்கிக் கொண்டு முனியம்மா வீட்டுக்குப் போகிறாள். குழந்தை பசியினால் லபக் லபக் கென்று சாதத்தை விழுங்குகிறான். அவன் சாப்பிட்ட பிறகு ராசாத்தி குழந்தையுடன் வீடு திரும்புகிறாள். விளக்கில் எண்ணெய் இல்லாததால் மங்கலாக எறிய ஆரம்பிக்கிறது. ராசாத்தி குழந்தையைத் தூங்க வைத்துவிட்டு பசி மேலிட்டவளாய் அயர்வுடன் படுக்கையில் சாய்கிறாள்.]

வீரன் :—*யாரது? வயத்தெப் பசிக்கிறது. சட்டியிலே கொஞ்சம் சோறு போட்டுக் கொண்டா.*

ராசாத்தி :—*மூட்டை மூட்டையா அரிசி வாங்கி போட்டேயே. அதோ ஆக்கி வச்சிருக்கேன். வயிறு கிழிய தின்னு.*

வீரன் :—ரண்டு நாள் முன்னே தானே அரிசி வாங்கி வந்தேன். யாருக்காவது வழியிலே போறவனுக்குக் கொடுத்தியா ?

ராசாத்தி :—ஆமாம், ஆமாம். உன்னை கட்டிக்கின தற்கு, சோர ஆம்படையான் தான் வைச்சிக்கணும். அவனுக்காவது சோறு போட்டா நாலு காசாவது சம் பாதிச்சி தருவான்.

வீரன் :—என்ன சொன்னே ? இனிமே இப்படி பேசு, உன்னை என்ன செய்றேன் பாரு. அப்பவே எனக்கு கெங்கன் மேலே சந்தேகம். ஏண்டாப்பா சும்மா நம்ம ஊட்டுக்கு வருனேன்னு பாத்தேன்.

ராசாத்தி :—ஆமாம், அது என் இஷ்டம் நீ கஞ்சி வாக் காட்டா அவனை வாக்கச் சொல்றேன். இதுக்கெல்லாம் ஒரு துப்பு கிடையாது. வாய் மாத்திரம் அதிகம் கிழி யறது.

[வீரன் கோபத்துடன் பக்கத்தில் இருந்த கழியை எடுத்து ராசாத்தியை அடிக்க ஆரம்பிக்கிருன். ராசாத்தி குய்யோ முறையோ வென்று கத்துகிருள். ஊர் ஜனம் அவ்வளவும் குடிசை யின் முன் கூடிவிடுகிறது. தலையாரி ரத்னம், ராசாத்தியையும் அவள் கணவனையும் மணியக்காரர் வீட்டிற்கு அழைத்துச் செல்கிருன்.]

காட்சி 4

[மணியக்காரர் வீடு. மணியக்காரர் ராசாத்தியையும் அவள் கணவனையும் விசாரிக்கிருர்.]

ராசாத்தி : சாமி, நீதான் எனக்கு பெத்த அப்பனும் அம்மாவும்மாதிரி. இதுகிட்டேயிருந்து என்னை விலக் கிட்டா ஒங்களுக்கு கோடி புண்ணியம் சாமி.

மணியக்காரர் : என், உனக்கு இவன் பிடிக்கவில்லையா? யாரையாவது.........

ராசாத்தி : அதெல்லாம் கிடையாது சாமி. முதல்ல கண்ணலம் பண்ணிக்குன்னு கோட்டை, கொத்தளம், எல்

லாம் வாரிக்கிட்டேனே, இனிமே இன்னொரு புருஷனை.........போதும் போதும் சாமி. கடவுள் கொடுத்த கை இருக்கு, நான் வேல செஞ்சி பொழைச்சி கொள்வேன், சாமி.

மணியக்காரர்: ஏண்டா, வீரா! அவளுக்கு என்னடா பதில் சொல்லுகிறாய்?

வீரன்: அது அப்படித்தான் சாமி சொல்லும். நான் ஏதோ தவறு கேட்டதற்குதான், கோவிச்சுக்குனு வந்துட்டுதுங்க.

ராசாத்தி: அதெல்லாம் பொய், சாமி தினம் கள்ளைக் குடிச்சிட்டு, என்னை அடிக்கிற அடியே போதும் சாமி. வேறெ காரணமும் வேண்டாம்.

மணியக்காரர்: ஏன், ராசாத்தி! உன் புருஷன்தானே உன்னை அடிக்கிறான். என்றைக்கோ ஒருநாள் கள் குடிச்சிட்டு வந்து அடித்ததற்காக புருஷனைத் தள்ளிவிடுகிறதா? நன்றாக யோசித்துப் பதில் சொல்லு.

ராசாத்தி: இது விசயம் ஒங்களுக்கு என்ன சாமி தெரியும்? எங்க தெருவிலே எல்லோரையும் கேட்டுப் பாருங்கோ, வேளா வேளைக்கி சோறு தண்ணி ஏதானும் உண்டா? கட்டிக்க துணிதான் உண்டா? நானுந்தான் போனாப் போறது, போனாப்போறதுன்னு பொறுத்துக்குனுதான் வந்தேன். தினம் என்னால் அடியை சமாளிக்க முடியலே சாமி. நான் சொல்றது பொய்யா இருந்தாகூட, என் உடம்பைப் பாருங்க எவ்வளவு காயம்?

மணியக்காரர்: என்னடா வீரா, பேசாமல் நிற்கிறாயே. அவள் சொல்வது நிஜந்தானே?

வீரன்: என்னமோ தெரியாமல் செஞ்சிட்டு இருப்பேன் எசமான். நீங்கதான் அவளுக்குப் புத்தி சொல்லி கூட்டி அனுப்புங்க.

எஜமான்: [ராசாத்தியின் காதைப் பார்த்துவிட்டு] ஏண்டா வீரா, கம்மல் வாங்கினாயே எங்கேயடா அது?

[வீரன் மௌனமாக தலையைக் குனிந்துகொள்ளுகிறான்.]

ராசாத்தி : அதையேன் கேக்கிற சாமி. அதை வெச்சி குடிச்சி ஒரு வருஷசத்துக்குமேலே ஆச்சு. சாமி! இனிமே என்னுலே பொறுத்துக்க முடியாது. நீங்க என்னே அடிச்சாலும் சரி நான் இதோட இருக்கமாட்டேன். இப்ப இப்படித்தான் சொல்லும். பிறகு அது வழியேதான் அது போவும்.

வீரன் : [கோபத்துடன்] அப்படித்தான் போகட்டும் எசமான். கொழந்தையைமாத்திரம் எங்கிட்ட கொடுக்கச் சொல்லுங்கோ.

மணியக்காரர் : இதைக் கேள் ராசாத்தி. உங்களுக்கு குழந்தையும் பிறந்திருக்கிறது. அதைப்பற்றியாவது புருஷனுடன் ஒற்றுமையாக இரு.

ராசாத்தி : கொழந்தை எங்கிருந்தா என்னசாமி? என் கண்ணு நல்லா இருக்கணும் அவ்வளவுதான். அடிகளே பொறுப்பதைவிட கொழந்தையை விட்டிருப்பது பரவாயில்லே, சாமி. நான் போறேன் என்னே மன்னிச்சிடுங்க.

[ராசாத்தி, கழுத்திலிருந்த வெறும் மணிகள் கோர்த்த தாலிக் கயற்றை கழற்றி வீரன்முன் வைக்கிருள். வீரன் துக்கம் தாங்காமல் குழந்தையை அணேத்தபடியே அழுகிருன்.]

ராசாத்தி : ஆஞ ஒன்னு சொல்றேன் சாமி. இந்த காங்கிரஸ் மவுராசங்க திரும்பிவந்து கள்ளுகடையெ ஒழிச்சா இதுகூட வந்து வாழறேன் சாமி. நான் போறேன் சாமி. (போகிருள்.)

மணியக்காரர் : அழுடா, அழு. பாழும் கள்ளினுலே நீங்க பிரிந்துபோகவேண்டியதுதான். கள்ளுக்காக பிரிவுத் துன்பத்தை அனுபவி. பாழும் கள், மனேவியைப் பிரிக்கும் கள், குடும்பத்தை நாசமாக்கும் கள்ளே நீ அழிக.

சந்திரன்

"எம்மெஸ்பி"

அன்று பௌர்ணமி. குளிர்ந்த தென்றல் சுகமாக வீசிக் கொண்டிருக்கிறது. இந்தக் குளிர்ச்சியை அதிகப் படுத்த சந்திரன் பால் போன்ற குளிர்ந்த வெள்ளிக் கலைகளை நாலா பக்கமும் சிக்கனத்தைக் கொஞ்சமும் கையாளாமல் அள்ளி வீசிக் கொண்டிருக்கிறான்.

யசோதை பிராட்டியார் தன்னுடைய மாளிகையின் அந்தப்புறத்தில் உப்பரிகையின்மேல் திறந்த வெளியில் நின்று கொண்டிருக்கிறாள். அவளுடைய இடையில் துடுக் குக் குழந்தை கிருஷ்ணன் மிடுக்கென்று அமர்ந்திருக்கி றான். அவன் பிரகாசிக்கும் சந்திரனைப் பார்த்து விட் டான். உடனே தனக்கு அந்தக் குளிர்ச்சிபொருந்திய சந்திரன் வேண்டுமென்று பிடிவாதம் செய்ய வாரம் பித்து விட்டான். சேடியர் அவனுக்கு வேறுவிதமான வேடிக்கைகளைக் காட்டி அவன் மனதைத் திருப்ப முயலு கிறார்கள். ஆனால் குழந்தை கண்ணனையா இப்படி யெல் லாம் ஏமாற்ற முடியும்? குழந்தை அழுகிறான். யசோ தையின் மனம் பதைக்கிறது. தன் குழந்தையின் இச்சை யைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று அவள் மனம் துடிக்கிறது. அவள் சந்திரனை முறைத்துப் பார்த்துவிட்டு சொல்லுகிறாள் :—

(1) "இளமை தங்கிய அழகிய அம்புலியே, என் குழந்தை,உலகத்தின் குழந்தையான கண்ணன் நெற்றியை அலங்கரிக்கும் சுட்டி அசைய, இடையில் அணிந்திருக் கிற சதங்கைகள் 'கிண்கிண்' என இன்னிசைபாட, தெருவில் புழுதியில் விளையாடியதால் புழுதிமண் உடம் பெல்லாம் படிந்திருக்கின்றது. ஓடிவா, ஓடிவந்து இவன் சேஷ்டைகளைப்பார். இவனுடைய சேஷ்டைகளை நீ

பார்க்க வருவதானல்தான் நீ கண்படைத்த பயன் பெறு வாய். அதனலேயேதான் உன்னை அழைக்கிறேன். என் கண்ணன் கண்களில் நீ தென்படுவாயாக!

"தன் முகத்து சுட்டி தூங்கத் தூங்கத் தவழ்ந்துபோய்
பொன் முகம் கிண்கிணி ஆர்ப்ப புழுதி அளேகின்றுன்
என் மகன் கோவிந்தன் கூத்தினை இளமாமதீ
நின்முகம் கண்உள ஆகில் நீ இங்கே நோக்கிப்போ.

(2) தாய் என்று நான் பெருமைபடும்படி என் வயிற் றில் பிறந்த என் கண்ணன் தன்னுடைய சிறு கைகளால் சதா உன்னையே சுட்டிக் காட்டி அழைக்கிறுன். அவ னுடைய அழகிய சிறு கைகள் சதா உன்னை அழைத்து அழைத்து சிவந்து விட்டன. இருண்ட நிறத்தையுடைய என் குழந்தை கண்ணனேடு விளையாடுவதற்கு உனக்குப் பிரியமானல் அந்தக் கருகிய மேகத்தில் போய் ஒளிந்துக் கொள்ளாதே! ஒரு வேளை மேகத்தின் நிறத்தைக்கண்டு என் கண்ணன்தான் என்று எண்ணி விளையாட அங்கு ஓடி விட்டாயா? இதோ என் மடியில் இருக்கிறுன் என் மகன் கண்ணன். ஓடிவா, என் மகனுடன் விளையாட ஓடிவா!"

"என் சிறுக் குட்டன் எனக்கு ஓர்இன் அமுது எம்பிரான்
தன் சிறு கைகளால் காட்டி காட்டி அழைக்கின்றுன்
அஞ்சனம் வண்ணனேடு ஆடல் ஆட உறுதியேல்
மஞ்சில் மறையாது மாமதீ மகிழ்ந்து ஓடிவா."

(3) மாமதியே! உன் உருவம் நிலேத்திருப்பதாக இல்லே. உன்னுடைய உருவம் தேய்வதும் வளர்வது மாக இருக்கிறுய். உன் உடலில் களங்கம் இருக்கிறது. நீ உன்னுடைய களங்கங்களே யெல்லாம் ஒழித்துவிட்டு கலேயாக பூரண வடிவத்தைக் கொண்டு செயற்கையழகை அதிகமாகச் செய்து கொண்டாலும் என் திருக்குமார னை கண்ணனுடைய முகத்தின் அழகோடு உன்னை ஒப் பிடுவதற்குக்கூட நீ அருகனல்ல! ஆகையாலே நீயே அழகிற் சிறந்தவனென்கிற ஆணவத்தை யொழித்து உன்னை அழகில் வென்றவனை திருவேங்கட மலேயிலே வாழ்பவனை இந்தக் கண்ணன் உன்னை அன்போடு

அழைப்பதை பரம பாக்கியமாக மதித்து விரைந்து ஓடிவா! அப்படி நீ உடனே வராவிட்டால் வெகுகால மாக உன்னை யழைக்கிற என்னுடைய கண்ணனுக்கு கையில் நோவெடுக்கும். இவ்வபசாரம் உன்னைத்தான் சேரும். ஆகையால் உடனே நீ ஓடிவா!''

''சுற்றும் ஒளி வட்டம் சூழ்ந்து சோதி பரந்து எங்கும்
எத்தனை செய்யிலும் என் மகன் முகம் நேர் ஒவ்வாய்
வித்தகன் வேங்கடவாணன் உன்னை விளிக்கின்ற
கை தலம் நோவாமே அம்புலீ கடிது ஓடிவா.''

(4) சந்திரனே! என் மகனை வெறும் குழந்தை யென்று நினைத்து அசட்டை செய்யாதே! இவன் கையில் என்ன இருக்கிறது தெரியுமா? சக்கராயுதத்தைக் கை யில் கொண்டுள்ளான். அவன் என் இடுப்பில் அமர்ந்து கொண்டு அழகிய அகன்ற கண்களாலே மலரப்பார்த்து உன்னையே சுட்டிக் காட்டுகிறான். தகுதியான தென்பது என்னவென்று நீ அறிந்திருப்பாயானல், குழந்தையின் துடிப்பின் வருத்தத்தை யறியாத மலடனை நீ ஒத்தவனில்லை யென்றால் நீ சூதுவாது ஒன்றும் செய்யாமல் வந்து நில். இல்லையேல் என் மகன் உன்மேல் சக்தி வாய்ந்த சக்கிரத் தைப் பிரயோகிப்பான்.''

''சக்கரம் கையன் தடக்கண்ணல் மலர விழித்து
ஒக்கலைமேல் இருந்து உன்னையே சுட்டிகாட்டும் காண்
தக்கது அறிதியேல் சந்திரா சலம் செய்யாதே
மக்கள் பெறாத மலடன் அல்லையேல் வா கண்டாய்.''

(5) ஒரே இடத்தில் நிலைத்திருக்காத சந்திரனே! என் அருமைக் கண்ணன் தன் இனிய மழலைச் சொற் களால் உன்னை கூவியழைக்கிறது உன் காதுகளில் விழ வில்லையா? அல்லது நீ செவிடனா? கண்ணன் உன்னை எப்படிக் கூப்பிடுகிறான் அவனுடைய அழகிய பவள வாயாலே—அவன் வாயில் ஊறுகின்ற ஜலமாகிய அம் ருதத்தோடே கூடிய மழலைச் சொற்களாலே உன்னைக் கூவி யழைக்கின்றான். என்கண்ணன் எப்படிப் பட்டவன் தெரியுமா? யாரிடமும் அவன் பொருந்தியிருப்பான். யார் பால் கொடுத்தாலும் கள்ளங் கபடமற்று உண்பான்.

அப்படிப்பட்ட கண்ணன் உன்னைக் கூவியழைக்கும் போது நீ நிற்காமல் ஓடிக்கொண்டிருந்தால் உன் காது களில் துவாரம் இல்லை என்றல்லவோ கருத வேண்டும்!"

"அழகிய வாயில் அமுதம் ஊறல் தெளிவுறு
மழலை முற்றாத இளஞ்சொல்லால் உன்னைக் கூவுகின்றான்
குழகன் சிரீதரன் கூவக் கூவ நீ போதியேல்
புழையில ஆகாதே நின் செவி புகர் மாமதீ."

(6) ஆகாயத்திலே பொருந்தியிருக்கும் பெருமை தங்கிய சந்திரனே! என்னுடைய கண்ணன் கையில் 'கௌமோதகி' என்னும் கதையையும் திருவாழி யாழ் வானையும் ஸ்ரீசார்ங்க மென்னும் வில்லையும் ஏந்தி நின் றுள்ள விசாலமான கைகளையுடையவன் தூங்குவதற்காக கொட்டாவி விடுகின்றான். அவன் இப்பொழுது தூங்கா விட்டால் அவன் உண்ட முலைப்பால் சீரணிக்காது. அதனால் விரைந்து ஓடிவா! கண்ணனுடைய கைகளில் பொருந் திய ஆயுதங்களின் அழகை நீ சேவித்துப் போவதுதான் உனக்குத் தகுதியேயன்றி அவற்றின் பராக்கிரமமத்திற்கு இலக்காகி உன் வாழ்நாட்களுக்கு முற்றுப் புள்ளிவைத்துக் கொள்ளாதே!"

"தண்டொடு சக்கரம் சார்ங்கம் ஏந்தும் தடக்கையன்
கண் துயில் கொள்ளக் கருதிக் கொட்டாவி கொள்கின்றான்
உண்ட முலைப்பால் அறா கண்டால் உறங்காவிடில்
விண் தனில் மன்னிய மாமதீ விரைந்து ஓடிவா

(7) "சந்திரா! உன்னை சளைக்காமல் அழைக்கின்ற என் மகனை 'இவன் என்ன சிறு குழந்தைதானே இவன் அழைத்தால் ஓடி வரவேண்டுமோ?' என்று அலட்சிய மாகவும், குறைவாகவும் நினைக்காதே! முன்னொரு காலத் தில் உலகங்களை யெல்லாம் பிரளயங்கொள்ளாதபடி வயிற் றிலே வைத்துக்கொண்டு ஆலந்தளிரிலே கண் வளர்ந்தவ னன சிறு பிள்ளையே இவன். இவன் கோபித்துக்கொண் டால் ஒரே பாயலாக உன்மேல் பாய்ந்து உன்னைப் பிடித் துக்கொள்ளுவான். ஆகையால் இவனை அவமதியாமல் உடனே மகிழ்ந்து ஓடிவா."

"பாலகன் என்று பரிவம் செய்யேல் பண்டு ஒரு நாள்
ஆலின் இலைவளர்ந்த சிறுக்கன் அவன் இவன்
மேல் எழுப்பாய்ந்து பிடித்துக் கொள்ளும் வெகுளும் ஏல்
மாலை மதியாத மாமதீ மகிழ்ந்து ஓடிவா."

(8) பூரண சந்திரனே! இளஞ் சிங்கத்தைப்போன்ற என் கண்ணனை மற்றுள்ள ஊர்ப்பிள்ளைகளைப்போல இவனும் ஒரு சிறுவன் என்று நினைத்து அவமதியாதே! என் கண்ணனுடைய பால்யத்தில் நடந்த பராக்கிரமமான செய்கையை மஹாபலியிடம் போய்கேட்டுக்கொள். அப்படிப் பட்டவன் விஷயத்தில் சிறுமை நினைத்த இது மகா அபராதம் என்று நினைத்தாயானால் நீயும் நீ பண்ணக்கூடிய அடிமைக்கு தகுந்தவனாய் ஆவாய். என் கண்ணன் உன்னை அழைக்கின்றான். நீ மகிழ்ந்து ஓடிவா!"

"சிறியன் என்று என் இளஞ்சிங்கத்தை இகழேல் கண்டாய்
சிறுமையில் வார்த்தையை மாவலி இடை சென்று கேள்
சிறுமை பிழை கொள்ளில் நீயும் உன் தேவைக்கு உரியைகாண்
நிறை மதி! நெடுமால் விரைந்து உன்னைக் கூவுகின்றான்."

(9) "சந்திரா, தாழியிலே இருக்கிற வெண்ணெய் இவனுக்கு எட்டாதபடி உயரத்தில் வைத்தால் கல்லை விட்டெறிந்து இந்தத் தாழியை உடைத்து வெண்ணெயை கைநிறைய அள்ளி அமுது செய்த பெரு வயிற்றையுடையவனான என் கண்ணபிரான் உன்னைக் கூவியழைக்கின்றான். இப்படி அவன் உன்னை அழைத்து நீ வரவில்லையானால் உன்மீது சக்கராயுதத்தைப் பிரயோகித்து உன்னை வெட்டிவிடுவான். இதில் சந்தேகமில்லை. என் கண்ணனுடைய சக்கிராயுதத்திடமிருந்து நீ தப்பி வாழ எண்ணும் பட்சத்தில் மகிழ்ந்து ஓடிவா.

"தாழியில் வெண்ணெய் தடங்கை ஆர விழுங்கிய
பேழை வயிறு எம்பிரான் கண்டாயுன்னைக் கூவுகின்றான்
ஆழிகொண்டு உன்னை எறியும் ஐயுறவு இல்லை காண்
வாழ உறுதியேல் மாமதீ மகிழ்ந்து ஓடிவா,'.

குழந்தைக்காக தாய் சந்திரனை வருந்தி அழைக்கும் இந்த அழகான காட்சி, இந்த அற்புதமான கவி உருவத்தில், ஒளி பொருந்திய ஸ்ரீவில்லிபுத்தூரில் உதித்தவரான பெரியாழ்வாரால் பாடப்பட்டது.

தந்திரம் பலித்தது

வி. எஸ். வெங்கடேசன்

"அது யார் மீனு?" என்று விஸ்வன், இடையில் குடத்துடன் போய்க் கொண்டிருந்த யுவதி ஒருத்தியைக் காட்டிக் கேட்டான்.

"என் அண்ணு, நன்ருக இருக்கிருள் இல்லையா?"

"ஆமாம்!"

"அவள் முகத்தில் என்ன களை பார்த்தாயா?"

"ஆமாம். நல்ல முகவெட்டுக் கூட!"

"அவள் நடையைப் பார்; அன்னம் போல் செல்கிருள். நடனசிங்காரி என்று தான் சொல்லவேண்டும்."

"நான் அவள் யார் என்று கேட்பதற்குப் பதில் சொல்லாமல், அவள் அழகையும் நடையையும் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிருயே?" என்று விஸ்வன் மீனுவை முறைத்துப் பார்த்தான்.

"என்ன அவசரம்? ஒரு சாதாரண வேலைக்காரியைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமா?"

"யார் அவள்? வேலைக்காரியா?" என்று விஸ்வன் திடுக்கிட்டுக் கேட்டான். ஆனல் அவன் கண்கள் அவள் வேலைக்காரி யில்லை என்று சொல்லுவது போல் அந்த யுவதியை பார்த்துக் கொண்டிருந்தன.

மெல்லிய வெள்ளைப் புடவை உடுத்தி, தலை பின்னி தொங்கவிட்டுக் கொண்டிருந்தாள். காதில் மாத்திரம் சிறிய கம்மல் இருந்தது. கையில் கண்ணுடி வளையல்களோடு இரண்டு பொன் வளையல்கள். அவள் தண்ணீர் குடத்தை எடுத்துக்கொண்டு அவ்வழியாகப் போகும் சமயம் விஸ்வத்தின் மீது தன் நயனஸ்தரத்தைச் செலுத்தி

யதே விஸ்வனை பிரமிக்கச் செய்து அவள் யார் என்று தெரிந்துகொள்ள ஆவலைக் கிளப்பியது.

"ஏன் அண்ணு, அவளைப் பார்த்தால் வேலைக்காரி போல் தோன்றவில்லையா? பாவம். அனுதை!"

"அனுதை!" என்றவுடன் விஸ்வன் மேலும் திடுக்கிட்டான்.

"பேசாமல் இருக்கிருயே?" என்று கேட்டாள் மீனு.

விஸ்வன் தன்னைச் சமாளித்துக் கொண்டு, "பேசாமல் என்ன மீனு! அனுதை என்ருயே யார்? அந்தப் பெண்ணு?" என்ருன்.

"ஆமாம். நீ இன்று வந்தாய். அதனுல் உனக்கு ஒன்றும் தெரியாது. அது கிடக்கட்டும் நீ அவளைக் கலியாணம் செய்து கொள்கிருயா?"

"சீ, போ; ஒரு வேலைக்காரிப் பெண்ணையா?" என்று தன் மனதிலுள்ளிருப்பதை மறைத்துச் சொன்னுன்.

"ஏன்? அழகா இல்லையா"

"அழகாக இருந்தால்...!" விஸ்வன் அந்த யுவதி போன திக்கை நோக்கிக்கொண்டே பேசினுன்.

"ஏன் இழுக்கிருய்? சொல்லேன்?"

"என்னத்தைச் சொல்ல? ஒரு பெண் அழகாக இருப்பதற்காகக் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமா?"

"இல்லை. இல்லை. பாவம் அனுதை. அதனுல்தான் சொன்னேன்."

"ஏன் அவளுக்கு அப்பா அம்மா ஒருத்தருமே இல்லையா?"

"இருக்கிருர்கள். அவர்கள் இவளைக் கவனிப்பதேயில்லை."

"எங்கே இருக்கிருர்கள்? ஏன் கவனிப்பதில்லை?"

"ரொம்ப தூரத்தில் இருக்கிருர்கள். பெண் கொஞ்சம் துடுக்குக்காரி. அதனுல் அவளுடைய அத்தை வீட்டில் விட்டு வைத்திருக்கிருர்கள். ஆனுல் என்வரை அவள்

ரொம்ப நல்ல பெண். நான் சொன்ன வேலைகளைத் தட்டுவதே கிடையாது. நானும் என் பழைய புடவை ரவிக்கைகளை கொடுக்கிறேன். அவள் அழகைக் கண்டு நானே வெட்கப் படுகிறேன். உண்மையாகச் சொல்லு. அண்ணு, அவள் நல்ல அழகிதானே ?"

"துடுக்காக இருக்கிருள் என்பதற்காகவா இம்மாதிரி விட்டு வைத்திருக்கிருர்கள் ?"

"அதெல்லாம் இருக்கட்டும், நீ இவளைக் கலியாணம் செய்து கொள்கிருயா, சொல்லு ?"

"ஹு ஹும்," என்று விஸ்வன் வாய் திறவாமல் மூக்கினலேயே தெரிவித்தான்.

"ஏன் ? வேலைக்காரி என்பதனலா ? அனுதை என்பதனலா ?

"அதனல் ஒன்றுமில்லை"

"பின் ?"

"அவள் அழகினல்தான் !"

மீனு கொல்லென்று சிரித்தாள். "அவள் அழகியாயிருப்பதால் வேண்டாம் என்கிருயா ?"

"ஆமாம் !"

"ஏன், யாராவது அவள் அழகைத் திருடிக்கொண்டு போய் விடுவார்கள் என்ற பயமா ?"

விஸ்வன் சிறிது நேரம் பேசாமல் இருந்தான். பிறகு, "மீனு ! நீயும் ஏதோ விளையாட்டாகக் கேட்டாய். நானும் சொல்லிவிட்டேன். அவள் யார் என்று சொல்லமாட்டாயா ?" என்ருன்.

"அவள் ஒரு அனுதை. அப்பா எனக்கு வேலை செய்ய அவளை ஏற்பாடு செய்திருக்கிருர். ஆனல் நான் அவளை என் வேலைகளைச் செய்யச் சொல்வதில்லை. அவள் அழகைக் கண்டு மயங்கி நான் அவளை என் ஆடை ஆபரணங்களால் அலங்கரித்து ஆசை தீரப் பார்த்துக் கொண்டே யிருப்பேன்."

"பாவம். நல்ல பெண்தான். என்ன செய்வது, நான் வேண்டுமானால் சம்மதித்து விடுவேன். அப்பா. அம்மா ?"

"அதைப் பற்றிக் கவலைப்படாதே, அண்ணு. இன்று ராத்திரி நீ என்னுடன் வா. நீ கேட்கவேண்டாம. அறைக்குள்ளே கூட வரவேண்டாம். வெளியிலேயே இரு. நான் உள்ளே போய் அப்பாவிடம் சொல்லி சம்ம திக்கச் செய்கிறேன்."

விஸ்வனுக்கு அப்பாவிடம் கேட்பதைப் பற்றி உள் ளூரப் பயம்தான். ஆனால் சகோதரி மீனு தானே கேட் டுச் சம்மதிக்கச் செய்கிறேன் என்றதினால் 'சரி' என்று ஒப்புக்கொண்டான்.

இரவு எட்டு மணி யிருக்கும். கிராமாந்தரமானதால் எல்லோரும் சீக்கிரமே போஜனத்தை முடித்துக்கொண் டார்கள். விஸ்வத்தின் தகப்பனார் சேதுபதி அய்யர் அரிக் கன் லைட் வைத்துக்கொண்டு படித்துக் கொண்டிருந்தார். மீனு விஸ்வத்தை அழைத்து வந்து தகப்பனாரின் அறைக்கு வெளியில் நிறுத்திவிட்டு உள்ளே வந்தாள்.

காலடிச் சப்தம் கேட்டு சேதுபதி அய்யர் பார் வையை புஸ்தகத்திலிருந்து எடுத்து கதவின் பக்கம் செலுத் தினார். மீனு சிரித்துக் கொண்டே தகப்பனாரை அணுகி "அப்பா என்ன படிக்கிறாய்?" என்று கேட்டாள்.

"நாவல்."

"நாவலா ? நன்றாயிருக்கிறதா ?"

"நன்றாயிருக்கிறது. அது கிடக்கிறது உன் அண்ணு வந்தானே அவனை ஏதாவது விசாரித்தாயா? பரீக்ஷை யெல்லாம் நன்றாக எழுதியிருக்கிறானா ?"

"கேட்டேன், அப்பா, நன்றாக எழுதியிருக்கிறானாம். அவனுக்கு......," என்று இழுத்தாள் மீனு.

"என்ன இழுக்கிறாய் ? அவனுக்கு என்ன வேண்டு மாம் ?"

"ஒன்றுமில்லை. அவன் கலியாணத்தைப் பற்றி

சொல்லிக் கொண்டிருந்தாயே. ஏதாவது ஏற்பாடு பண்ணுயா அப்பா ?''

"அவன்தான் நான் சொன்னதைக் கேட்கமாட்டேன் என்கிருனே !''

''கேட்காமல் என்ன, அப்பா ?''

''கேட்பவனுக யிருந்தால் ஏன் அவன் அத்தை பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ளக்கூடாது ?''

'' அவளைப் பிடிக்கவில்லையாம்.'

'' ஏன் ?''

'' அது எனக்குத் தெரியாது அப்பா......அவளையே தான் கலியாணம் செய்யவேண்டுமா அப்பா ?'' என்று கண்ணைச் சிமிட்டிக்கொண்டே கேட்டாள் மீனு.

''பின் யாரை ? அந்தத் தெருவில் போராளே அவளை கலியாணம் செய்து வைக்கட்டுமா ?'' என்று சற்று கோபத்துடன் கேட்டார் சேதுபதி அய்யர்.

மீனு சாந்தத்துடன், ''இல்லை அப்பா. அப்படிச் சொல்லவில்லை. வேறு யாரையாவது...? என்றுதான் கேட்டேன்,'' என்ருள்.

''அதெல்லாம் முடியாது மீனு. அவளைத்தான் கலியாணம் செய்துகொள்ளவேண்டும். இல்லாவிட்டால்.... நான் என் மனமார எந்தப் பெண்ணையும் என் வீட்டில் காலடி எடுத்து வைக்கச் சம்மதிக்கமாட்டேன்.''

''நீயே அப்படிச் சொன்னல் எப்படி அப்பா ? அவனுடைய சுகத்தையும் பார்க்கவேண்டாமா ?''

'' சுகத்திற்காகத்தான் சொல்கிறேன். இன்னும் இரண்டு நாட்களில் உன் அத்தை தன் பெண்ணை அழைத்துக்கொண்டு வருகிருள். இவன் வேண்டாமென்ருல் கூட இவன் காலிலேயே கட்டிவிட்டுப் போகப் போகிருள் பார் !'' என்று சொல்லி அவர் நாற்காலியிலிருந்து கட்டிலுக்குச் சென்று படுத்துக்கொண்டார்.

மீனு வருத்தத்துடன் வெளியே வந்து விஸ்வனை அழைத்து, ''சமாசாரத்தைக் கேட்டுக்கொண்டுதானே இருந்தாய் ?'' என்ருன்.

"எனக்கு அப்பொழுதே தெரியும். நீதான் அப்பா கிட்ட கேட்கிறேன் என்ருய்" என்று சலிப்புடன் கூறிக் கொண்டே விஸ்வன் படுக்கச் சென்ருன்.

விஸ்வன படுக்கையில் படுத்துக் கொண்டே சிந்தனை யிலிருந்தான்.

எட்டு வருஷத்திற்கு முன் அவன் அத்தை பம்பாயி லிருந்து வந்திருந்தாள். அவளுடன் அவள் பெண் குமு தாவும் வந்திருந்தாள்.

குமுதத்திற்கு எப்பொழுது பார்த்தாலும் மூக்கில் சளி ஒழிகிக் கொண்டிருக்கும். பாவாடை கூட சரியாகக் கட்டிக்கத் தெரியாது. பத்து வயசுப் பெண்ணுக்குப் பாவாடை கூடக் கட்டிக்கத் தெரியவில்லையே என்று எல் லோரும் பரிகசிப்பார்கள். அந்த அபூர்வ சுந்தரியைத்தான் சேதுபதி அய்யர் விஸ்வனுக்கு கலியாணம் செய்து கொடுக்க வேண்டுமென்று இன்று வற்புறுத்தினர்.

விஸ்வன் அந்த பெண்ணை நினைவில் கொண்டுவந்து யோசித்துப் பார்த்தான். அந்தப் பெண்ணைக் கலியாணம் செய்துகொள்வதை விட பிரமசாரியாகவே யிருக்கலாம் என்று தோன்றியது.

இரவு பத்து மணி இருக்கும். நிலா பட்டப்பகல்போல் காய்ந்து கொண்டிருந்தது. விஸ்வன் ஜன்னலைத் திறந்து வைத்துக் கொண்டு படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந் தான். அவன் கவன மெல்லாம் பாவாடை கூட சரியா கக் கட்டத் தெரியாத அத்தை பெண் மீதே யிருந்தது.

யாரோ உள்ளே வரும் சப்தம் கேட்டு திரும்பிப் பார்த்தான். "என் அண்ணு, தூங்கல்லியா?" என்று கேட்டுக்கொண்டே மீனு உள்ளே வந்து மங்கியிருந்த விளக்கை தூண்டிவிட்டாள். அவள் விளக்கைத் தூண் டியது விஸ்வன் மனேவேதனையை இன்னும் அதிகமாக் கியது போலிருந்தது.

அதுவரை மங்கின ஒளியில் வாட்டமடைந்து மறைந் திருந்த அவன் முகம் வெளிச்சத்தில் அதன் கலக்கத்தைக் காட்டியது.

" அப்பா சொன்னதை நினைத்துக்கொண்டே உட்கார்ந்திருக்கிறாயா ?" என்றாள் மீனா.

விஸ்வன் தடைப்பட்ட குரலில் "ஆமாம்!" என்றான்.

" நான் கூடக் கேட்கிறேன், அண்ணா. நீ அத்தை பெண்ணைக் கலியாணம் செய்து கொள்கிறது தானே?"

விஸ்வன் பதில் சொல்லாமல் மௌனமாக உட்கார்ந்திருந்தான்.

" பதில் சொல்லு அண்ணா ?"

" மீனா, உன்னிடம் உண்மையைச் சொல்லுகிறேன். எனக்கு என்னவோ இந்த பெண்ணை பார்த்த பிறகு வேறு ஒருத்தியையும் கலியாணம் செய்துகொள்ள மனம் வரவில்லை. பாவம். அனாதை. இவளை கலியாணம் செய்து கொண்டு வாழ்க்கையில் இவள் மனதைச் சந்தோஷப் படுத்தினால் எவ்வளவு புண்ணியம் தெரியுமா ?" என்றான் விஸ்வன் மனம் விட்டு.

" ஆமாம், வாஸ்தவம் தான். அதற்காக நம் சம்பந்தத்தை விட்டுவிடுவதா ? நாளை என்னை என் அத்தானுக்குக் கேட்டால் கொடுப்பார்களா ?"

" அத்தான் இல்லாவிட்டால் வேறு ஒருத்தன் வந்து விட்டுப் போகிறான்."

" ஏன், நீ மாத்திரம் உனக்கு இஷ்டப்பட்டவளைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டும். நான் மாத்திரம்...?"

" உன் இஷ்டத்திற்கு நான் குறுக்காகவா நிற்கிறேன் ?"

" பின் ? நீ அவளைக் கலியாணம் செய்துகொள்ளாவிட்டால் நான் அத்தானைக் கலியாணம் செய்துகொள்ள முடியாது," என்று மீனா சற்று வருத்தத்துடன் சொன்னாள்.

விஸ்வன் பதில் சொல்ல வில்லை. முதலில் தனக்காக இவ்வளவு கஷ்டப்பட்டவள் இப்பொழுது இம்மாதிரி பேசுகிறாளே என்று ஆச்சரியப்பட்டான்.

"ஏன் அம்மா தூங்கவில்லையா?" என்று கேட்டுக்கொண்டே வேலைக்காரி உள்ளே வந்தாள்.

விஸ்வன் அவளைப்பார்த்து பிரமித்து விட்டான். அவள் காலை உடுத்தியிருந்ததைவிட மிகவும் அழகான புடவை உடுத்தியிருந்தாள். நன்ருக அலங்காரம் செய்து கொண்டிருந்தாள்.

மீனு சிறிது யோசித்து, "கொஞ்சம் இரு, போய் படுத்துக்கொள்ளலாம்," என்று வேலைக்காரியிடம் சொல்லிவிட்டு, விஸ்வனைப்பார்த்து, "நான் சொல்வதைக் கேள். இவளைவிட அத்தை பெண் மிகவும் அழகாகயிருக்கிருள். நீ ஒன்றும் யோசனை செய்யாதே!" என்ருள்.

"முடியவே முடியாது, மீனு! அவளை நான் கலியாணம் செய்துகொள்ளவே மாட்டேன்," என்று கண்டிப்பாகச் சொன்னுன்.

மீனு விடாமல், "பிறகு என்னிடம் இதைப்பற்றி சொல்லக்கூடாது. உண்மையாகச் சொல்லு?" என்ருள்.

"உண்மையாகத்தான்!"

"சரி, உன்னிஷ்டம். ஆனுல் ஒரு விஷயம். நேற்று அவள் போட்டோ வந்திருந்தது. அதைப்பார். பிறகு கடைசியாக முடிவைக் கூறிவிடு."

விஸ்வன் வேண்டா வெறுப்புடன் போட்டோவைப் பார்க்கச் சம்மதித்தான்.

மீனு அதிகார தோரணையில் வேலைக்காரியிடம், "சீக்கிரமாக நேற்றுவந்த படத்தை எடுத்துவா" என்ருள்.

பத்து நிமிஷம் கழித்து வேலைக்காரி காகிதத்தில் சுற்றியிருந்த போட்டோவை எடுத்துவந்து மீனுவிடம் கொடுத்துவிட்டு மின்னல் வெட்டுப்போல் அங்கிருந்து சென்றுவிட்டாள். விஸ்வன் அவளை மறுமுறை பார்க்க வேண்டுமென்று நினைத்திருந்தான். ஆனுல் அவள் படத்தைக் கொடுத்துவிட்டு உடனே போய்விட்டது பெருத்த ஏமாற்றத்தை அளித்தது.

"பார், அண்ணு," என்று மேலே சுற்றியிருந்த காகிதத்தை விலக்கிப் படத்தை விஸ்வனிடம் கொடுத்தாள்.

விஸ்வன் படத்தைப்பார்த்து திடுக்கிட்டான். அவன் கண்களை அவனே நம்பமுடியவில்லை. அவன் ஆச்சரியத்துடன், "இது யாருடைய படம்?" என்றுன்.

"உன் அத்தை பெண்ணுடையதுதான்!"

"சரியாகப் பார்" என்று மீனுவிடம் படத்தைக் கொடுத்தான் விஸ்வன்.

மீனு படத்தை வாங்கிப்பார்த்து, "ஆமாம். என்ன சந்தேகம்?" என்றுள்.

"நிஜமாக? இந்தப்படம் அவளுடையதுதானு?"

"ஆமாம்! ஆமாம்!! எத்தனை தடவை சொல்வது?"

விஸ்வன் மீனுவின் கையை பிடித்துக்கொண்டு, "அப்படியானல் இந்த வேலைக்காரி யார்?" என்று கேட்டான். அவன் குரல் கடுமையாகயிருந்தது.

"வேலைக்காரி வேலைக்காரிதான்!"

"அது எனக்குத் தெரியும். அவள் யார் என்றுதான் கேட்கிறேன்."

"அவள்தான் உன் அத்தையின் பெண்!" என்று சொல்லி மீனு சிரித்தாள்.

விஸ்வன் அவள் கையை கிள்ளிக்கொண்டே "பொய் தானே சொன்னே. அனுதை என்று? அது கிடக்கட்டும். அத்தை இன்னும் ரெண்டு நாளில் வருவதாகச் சொன்னரே அப்பா, அவள்கூட இங்கேயே எங்காவது மறைந்து கொண்டிருக்கிறுர்களா?" என்றுன்.

மீனு சிரித்துக்கொண்டே, "அவர்கள் மறைந்திருக்கவில்லை. அவர்கள் சுவாமி தரிசனத்திற்காக திருச்சி போயிருக்கிறுர்கள்" என்று சொல்லிவிட்டு "டீ, எங்கே போயிட்டே வா, இங்கே!" என்றுள்.

'வேலைக்காரி' தலைகுனிந்த வண்ணம் உள்ளே வந்தாள். விஸ்வன் அவளைக் கடைக்கண்ணால் பார்த்துக் கொண்டு, "மீனா, இந்த குறும்பெல்லாம் உன்னால்தான் நடந்திருக்கிறது," என்றான்.

"என்னால்தான்! இனிமேலாவது இந்த பெண்ணைக் கலியாணம் செய்து கொள்வாயா மாட்டாயா?"

"கட்டாயம்!"

அதே சமயம் யாரோ சிரிக்கும் சப்தம் கேட்டு திடுக்கிட்டான். விஸ்வன் தாயாரும் தகப்பனாரும் சிரித்துக் கொண்டே உள்ளே வந்து "மீனா, நீ செய்ததுதான் சரியான வேலை. இல்லாவிட்டால் இவன் சம்மதித்தே இருக்கமாட்டான்," என்றார்கள்.

விஸ்வன் வெட்கித் தலை குனிந்துகொண்டான்.

Ask for

STAR OF INDIA PENCILS

(All grades in Black, Copying, & Colour)

★

Manufactured by

THE MADRAS PENCIL FACTORY, MADRAS

வைரம் எங்கே?

"கிச்சு"

வக்கீல் வேணுகானமய்யர் வக்கீல் தொழில் மட்டும் செய்யவில்லை. தங்கள் நகைகள் என்று வெளியில் தெரியக்கூடாது என்று நினைக்கும் பணக்காரர்களின் நகைகளை ரகஸ்யமாக கமிஷனுக்கு விற்றுத் தருவது, வரன்கள் தேடி கலியாணங்களை முடித்து, வரும்படி தரக்கூடிய தொழில்களையும் செய்து கொண்டிருந்தார். வக்கீல் தொழிலில் மாசம் பத்துப் பதினைந்துகூட வரவில்லை. தொழில்கள் செய்யாமல் எப்படியிருக்க முடியும்? அவர் தன் ஆபீஸைத் தன் வீட்டில் வைத்துக் கொள்ளவில்லை. ஆடம்பரப் பிரியர். தனியாக ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து அதில் ஆபீஸை நடத்திக் கொண்டிருந்தார்.

அவருடைய குமாஸ்தா சரவணபவத்தைப் பற்றி ஒரு வார்த்தை சொல்ல வேண்டியது அவசியம். அவனை வில்லாதி வில்லன் என்றே சொல்ல வேண்டும். வக்கீலுக்குக் கேஸ்கள் கொண்டு வருவதில் வில்லாதி வில்லன் அல்ல. அக்கப்போர் சமாசாரங்கள் எது எங்கு நடந்தாலும் அவனுக்குத் தெரியாமலிருக்காது. வக்கீல் வீட்டிற்கு வருகிறவர்கள் தன்னிடம் வராமல் நேராக வக்கீலிடம் போனால் எதற்கு வந்தார்கள் என்ற சமாசாரம் அவனுக்குத் தெரியாவிட்டால் அவனுக்கு தலை வெடித்து விடும். சில சமயம் அவர்கள் உள்ளே பேசிக் கொண்டிருப்பது திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருக்கும் அவன் காதில் விழும். அதிலேயிருந்து அவர்கள் என்ன காரியமாக வந்தார்கள் என்று கண்டு கொள்வான். சில சமயங்களில் ரகஸ்யமாக பேசிய சமாசாரமாயிருந்தால் வக்கீலே அவனிடம் எல்லாவற்றையும் ரகஸ்யமாகச் சொல்லி விடுவார்.

ஒரு நாள் அவன் வாசல் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு ஏதோ எழுதிக்கொண்டிருந்தபொழுது ஒருவர் ஒரு கேஸ் கட்டுடன் வந்தார்.

"இது வக்கீல் சுந்தரமய்யர் ஆபீஸ்தானே?" என்று கேட்டார்.

"இல்லை. சுந்தரமய்யர் இறந்து இரண்டு வருஷமாகிறது. அவர் பிள்ளை வேணுகானமய்யர் வக்கீல் வேலை பார்க்கிறார். இங்கே தான் அவரும் ஆபீஸ் வைத்துக் கொண்டிருக்கிறார். என்ன விசேஷம்?" என்று கேட்டான் சரவணபவம். அவன் கேள்வியை அவர் லக்ஷ்யம் பண்ணாமல் "உள்ளே யிருக்கிறான்னோ, அவரைப் பார்க்கலாமோன்னோ?" என்றார் வந்தவர்.

"பேஷாக," என்றான் சரவணபவம்.

அவர் உள்ளே போனவுடன் வக்கீல் இருந்த உள் கதவு சாத்தப்பட்டது. இது ஆச்சரியமாயிருந்தது சரவணபவத்திற்கு. தான் குமாஸ்தாவாக வந்த இரண்டு வருஷமாக இது மாதிரி ஒரு நாள்கூட கிடையாது. என்ன பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்று ரொம்ப சிரமப்பட்டு ஒட்டுக்கேட்டான். ஒரு வார்த்தைகூட அவன் காதில் விழவில்லை. கால் மணி நேரங் கழித்து கதவு திறக்கும் சப்தம் கேட்டது.

"சுந்தரம் பிள்ளைவாள்! நான் சொல்லுகிறதைக் கேளுங்கோ. என்னிடம் கொடுத்து விட்டுப் போங்கோ! இரண்டு நாள் கழித்து வாருங்கோ. கவலைப் படாதேயுங்கோ," என்று வேணுகானமய்யர் சொன்னது சரவணபவத்தின் காதில் கணீர் கணீரென்று விழுந்தது. வந்தவர் இரண்டு நிமிஷம் யோசிப்பதுபோல் நின்று கொண்டிருந்தார். திரும்பி உள்ளே போனார். மறுபடியும் கதவு சாத்தப்பட்டது. பத்து நிமிஷங் கழித்து சுந்தரம் பிள்ளை தான்கொண்டு வந்த கேஸ்கட்டை எடுத்துக்கொண்டு போய் விட்டார்.

சரவணபவத்திற்கு விஷயம் ஒன்றும் புரியவில்லை. சுந்தரம் பிள்ளை கதவைச் சாத்திக்கொண்டு உள்ளே

என்ன பேசிக் கொண்டிருந்தார் என்று அறிய அவா அவனைத் தூண்டியது. இவ்விஷயத்தை அறிந்து கொள்ளாவிட்டால் இராத்திரி தூக்கமே பிடிக்காது போல் தோன்றியது. வக்கீல் தானகவே ஏதாவது சொல்லுவாரோ என்று பார்த்தான். ஒன்றும் சொல்லாமல் வீட்டிற்குப் போய் விட்டார். எப்பொழுதும் யார் வந்து விட்டுப்போனலும் எதற்காக வந்து விட்டுப் போனர் என்று வக்கீல் ஏதாவது குறிப்பு டயரியில் எழுதி வைத்து விட்டுப்போவது வழக்கம். அது மாதிரி ஏதாவது குறிப்பு எழுதி வைத்திருக்கிருரா என்று வக்கீலின் தலை மறைந்தவுடன் ஒரே தாவலாகத் தாவி உள்ளிற்குப் போய் அவர் டயரியைத் திறந்து பார்த்தான். ஒன்றுமில்லை. இதெல்லாம் பெரிய மூடு மந்திரமாக சரவணபவத்திற்குத் தோன்றியது. கேஸ் விஷயமாக சுந்தரம் பிள்ளை வரவில்லை என்பதில் சந்தேகமில்லை. அப்படி ஏதாவது இருந்திருந்தால் கேஸ் கட்டை வக்கீல் தன்னிடம் கொடுத்திருப்பார். ஏதாவது விலை யுயர்ந்த நகையையோ அல்லது வைர நகையையோ விற்பனைக்காகக் கொடுத்து விட்டுப் போயிருக்க வேண்டும். அதில் சந்தேகமில்லை. "சுந்தரம் பிள்ளைவாள்! நான் சொல்லுகிறதைக் கேளுங்கோ! என்னிடம் கொடுத்து விட்டுப் போங்கோ! இரண்டு நாள் கழித்து வாருங்கோ," என்ற வார்த்தைகள் அவன் காதில் இன்னும் தொனித்துக் கொண்டிருந்தன. வந்தவர் ஏன் கதவைச் சாத்திக்கொண்டு பேசினர். வக்கீல் ஏன் தன்னிடம் ஒன்றையும் சொல்லவில்லை; ஏன் அவர் டயரியில் ஒரு குறிப்பும் எழுதிவைக்கவில்லை என்று அவனுக்குப் புரியவில்லை.

அடுத்த நாள் காலை வக்கீலின் ஆபீஸிற்குக் கடைத் தெரு வழியாக வரும் பொழுது ஆற்றில் யாரோ பிணமாகக் கிடந்ததாக ஒரே பேச்சாக இருந்தது. அந்த ஆசாமி யார் என்று அறிய வெகு வேகமாக ஆற்றங்கரைப் பக்கம் போனன். அங்கே பிணமாய்க் கிடந்தது வேறு ஒருவருமில்லை. சுந்தரம் பிள்ளைதான்! அங்கே வந்திருந்த டாக்டர் ஒருவர் சுந்தரம் பிள்ளையின் பிரேதத்தைப் பரிசோதித்துவிட்டு சுந்தரம்பிள்ளை ஆற்றின் மதில் சுவரில் உட்கார்ந்து கொண்டிருக்கும்

பொழுது தப்பித்தவறி ஆற்றில் விழுந்திருக்கலாமென்றும் அல்லது யாராவது வேகமாக ஆற்றில் அவரைத் தள்ளி யிருக்கக்கூடு மென்றும்; அப்படி விழுந்த வேகத்தில் பாலத்தின் மத்தியில் நீட்டிக்கொண்டிருந்த பாராங்கல்லில் மோதி தலை உடைந்து போய்விட்டதென்றும் சொன்னார். ஆனால் ஒரு விஷயம் வெளியாயிற்று. முதல்நாள் சுந்தரம் பிள்ளை வக்கீல் வேணுகானமய்யர் வீட்டிற்குப் போனதை யாரோ பார்த்ததாகச் சொன்னார்கள். தன்னிடம் அதை மறைத்து வைத்தாரோன்னோ, இப்பொழுது எதற்காக தன்னிடம் வந்தார்; என்ன பேசிக்கொண்டிருந்தார் என்று விசாரணையின் பொழுது சொல்லித்தானே ஆக வேண்டும் என்று அக்கப்போர் விஷயங்களை அறிவதே தன் லக்ஷ்யம் என்று நினைத்துக் கொண்டிருக்கும் அவன் மனம் சந்தோஷமடைந்தது. ஆனல் அவன் மறுபடியும் ஏமாற்ற மடைந்தான். சுந்தரம் பிள்ளை தன் தகப்பனு ருடைய பழைய கக்ஷிக்காரரென்றும் தான் தன் தகப்ப னைப்போல் நன்ருக பிராக்டிஸ் பண்ணுகிறேனு என்று விசாரித்துவிட்டுப் போகவந்தா ரென்றும் வேறு விஷயம் ஒன்றுக்கும் அவர் வரவில்லை யென்றும் வேணுகான மய்யர் சொல்லிவிட்டார். அவர் சொன்னது நிஜம் என்று நம்பப்பட்டது. சரவணபவத்திற்கு அவர் சொன்னதைக் கேட்டவுடன் தூக்கி வாரிப் போட்டது. இப்படி தன் வக்கீல் வேணுகானமய்யர் ஒரே யடியாகப் பொய்சொல் வார் என்று அவன் சொப்பனத்தில் கூட நினைக்கவில்லை. தன் வக்கீலின் மானத்தைக் கப்பலில் ஏற்ற சக்தி அவன் கையிலிருந்தது.

"சுந்தரம் பிள்ளைவாள்! நான் சொல்லுகிறதைக் கேளுங்கோ! என்னிடம் கொடுத்துவிட்டுப் போங்கோ! இரண்டுநாள் கழித்து வாருங்கோ," என்ற வார்த்தைக ளுக்கு அர்த்தமென்ன என்று பகிரங்கமாகக் கேட்டு விடலாமா என்று அவனுக்குத் தோன்றியது. ஆனல் அப்படி கேட்டுவிடுவதினுல் அவன் வயிறு நிரம்பிவிடுமா? இதையே வியாஜமாக வைத்துக்கொண்டு தன் வக்கீலை தன் இஷ்டப்படி கறக்கலாம் என்று அவனுக்குத் தோன் றியது. ஏதோ விலையுயர்ந்த நகையைச் சுந்தரம்பிள்ளை அவரிடம் விற்கும்படிக்கு கொடுத்திருக்கிருர் என்பதில்

சந்தேகமில்லை. அந்த நகையை அப்படியே ஸ்வாஹா பண்ணிவிடப் பார்க்கிறார் என்பதிலும் சந்தேகமில்லை. வக்கீல் ஏழைதான். அதிலும் சந்தேகமில்லை. ஆனால் தான் மட்டும் பிரபுவோ! வக்கீலின் நடவடிக்கையைக் கவனிக்க வேண்டியது முக்கியம் என்று சரவணபவத்திற்குத் தோன்றியது.

(2)

மேலே சொன்ன சம்பவங்கள் நடந்து இரண்டு நாள் கழித்து ஒருநாள் காலை ஏழுமணிக்கு சரவணபவம் வக்கீலின் ஆபீஸுக்குப் போனான். வாசல் கதவு சாத்தப்பட்டிருந்தது. சரிதான்! நமக்கு முந்தியே வக்கீல் ஆபீஸுக்கு வந்துவிட்டார் என்று நினைத்துக்கொண்டு உள்ளே வக்கீலிருக்கும் அறைக்குப் போனான். அங்கே கண்ட காக்ஷி அவனைப் பிரமிக்கச் செய்தது. அங்கே வக்கீல் ரத்தப் பிரவாகத்தின் மத்தியில் பிணமாய்க் கிடந்தார். பல தஸ்தாவேஜிகள் கண்டபடி கீழே வீசி யெறியப்பட்டிருந்தன. மேஜைமேலிருந்த பச்சை இங்கிபுட்டி கவிழ்ந்து மேஜைமீது ஓடி கீழே கொட்டியிருந்தது. அப்படியே ஸ்தம்பித்துப் போய்விட்டான் சரவணபவம். விஷயம் ஒன்றுமட்டும் அவனுக்குப் புரிந்துவிட்டது. சுந்தரம்பிள்ளை வக்கீலிடம் ஒரு நகையை கொடுத்துவிட்டுப் போயிருக்கிறான். அந்த நகைக்காக யாரோ ஒருவன் சுந்தரம் பிள்ளையைக் கொலை செய்திருக்கிறான். அந்த நகை அவனிடம் காணமல் போகவே ஒருவேளை இவரிடம் இருக்கக் கூடும் என்று அவன் சந்தேகித்து இவரைக் கொலை செய்திருக்கவேண்டும். அதில் சந்தேகமில்லை? ஆனல் அவன் எண்ணம் பலித்ததா இல்லையா என்று சரவணபவத்திற்குப் புரியவில்லை. உடனே போலீஸுக்கு விஷயத்தைத் தெரியப்படுத்தினன். வேணுகானமய்யருடைய மனைவி வக்கீல் முதல்நாள் சாயங்காலம் ஏதோ கேஸ் விஷயமாக விட்டல்புறத்திற்குப் போகவேண்டிருக்கிற தென்றும் அடுத்தநாள் சாயங்காலம்தான் வருவேனென்றும் சொல்லிவிட்டுப் போனர் என்றாள். சரவண பவத்திற்கு விஷயம் புரிந்துவிட்டது. வக்கீல் ரெயில் ஸ்டேஷனுக்குப் போகும் பொழுது ஏதோ கேஸ் கட்டு

கள் எடுத்துக்கொண்டு போகிறதற்காகவோ அல்லது ஏதோ காரணத்தினலோ ஆபீசுக்குப் போயிருக்கிருர். அவரைப் பின் தொடர்ந்து யாரோ ஆபீசுக்குள் போய் அவரைக் கொலே செய்திருக்கிருன் என்று போலீஸ் காரர்கள் முடிவுக்கு வந்துவிட்டார்கள். அவர்கள் சரவண பவத்தை லக்ஷயம் பண்ணி ஒன்றும் கேட்கவில்லே. அவன் ஒரு வக்கீல் குமாஸ்தாதானே என்று இருந்துவிட்டார் கள். எப்பொழுது தன்னே அவர்கள் லக்ஷயம் பண்ண வில்லேயோ தானுகவே தனக்குத் தெரிந்ததைச் சொல் லவும் அவன் விரும்பவில்லே.

(3)

மேற்சொன்ன எல்லாம் நடந்து பதினேந்து நாளா யிற்று. வீணுக ஆபீசுக்கு வாடகை கொடுப்பானேன், அதை காலி பண்ணி விடலாமே என்று வேணுகானமய்ய ரின் உறவினர்கள் நினேத்தார்கள். ஆபீஸில் கேஸ் கட்டு களேத் தவிற வேறு இல்லாதபடியால் கேஸ் கட்டுகளேப் பார்த்து அவைகளே யார் யாரிடம் கொடுக்கவேண்டுமோ அவர்களிடம் கொடுக்கும் வேலே சரவணபவத்தினிடம் நம்பிக்கையோடு ஒப்புவிக்கப்பட்டது. அந்த வேலேயில் ஒரு வாரமாக ரொம்ப சிரத்தையுடன் ஈடுபட்டிருந்தான் சரவணபவம். ஒரு வேளே சுந்தரம் பிள்ளேயையும் வேணு கானமய்யரையும் கொலே செய்தவனுக்கு அவன் தேடி வந்த நகை அகப்படாம லிருந்தாலும் இருக்கலாமல்லவா? ஆகையால் ரொம்ப சிரத்தையாக அலமாரிகளே ஒழிக்கும் வேலேயில் ஈடுபட்டிருந்தான் சரவணபவம். அவன் பிர யத்தனம் வீணுகவில்லே. ஒரு பீரோவின் இரண்டாவது தட்டின் மூலே யொன்றில் ஒரு சிறிய பொத்தான் இருந் தது. அதை அழுத்தியவுடன் பீரோவின் மூலேயிலிருந்த ஒரு ரகஸ்ய அறை திறந்துகொண்டது. அதில் ஒரு சிறிய துணி முடிப்பு இருந்தது. சரவணம் அதை அவிழ்த்துப் பார்த்தான். ஆ? அவன் அதிர்ஷ்டத்தை என்ன வென்று சொல்லுவது. அதில் ஒரு வைரம் இருந்தது. அது அதிக விலேயுயர்ந்ததாக இருக்கவேண்டும்: அவ்வளவு டால் வீசியது அது! யாராவது தன்னேக் கவனிக்கிருர் களோ என்று பார்த்தான். ஒருவருமில்லே! வாசல்

கதவும் திண்ணை ஜன்னல் கதவும் நன்றாக சாத்தப்பட்டிருக்கும் பொழுது யார் எப்படி பார்க்கமுடியும்? சுந்தரம் பிள்ளையிடம் ஒரு வைரமிருந்தது. அது திருட்டு சொத்தா, நல்ல சொத்தா? தன் கையில் வைரமிருக்கிற விஷயம் வெளிவர அவன் இஷ்டப்படவில்லை. சுந்தரம் பிள்ளை கைமாறி, வேணுகானமய்யர் கைமாறி கடைசியில் தன் கையில் சிக்கியது தன் அதிர்ஷ்டம் என்றே சொல்ல வேண்டும். அதை ஷர்ட் பாக்கெட்டில் மணிபர்ஸில் போட்டுக்கொண்டு மீண்டும் ஒழிக்க ஆரம்பித்தான். ஆனால் அவன் மனம் வைரத்தின் மேலேயே ஈடுபட்டிருந்தது. உள்ளூரிலே அதை விற்கப் பிரயத்தனப்பட்டால் எது வைரம், என்ன சங்கதி என்று எல்லாரும் குடைய ஆரம்பிப்பார்கள். தன் பேரில் சந்தேகம் ஏற்பட்டுவிடும். தான் ஊரைவிட்டு வெளியூருக்குப் போனாலும் தனக்கும் கொலைக்கும் ஏதாவது சம்பந்தமுண்டோ என்று சந்தேகமுண்டாகும். ஆகையால் ஒருமாத காலம் கழித்து வெளியூருக்குக் கம்பி நீட்டி விடுவதே யுக்தம் என்று அவனுக்குத் தோன்றியது. ஆனால் மறுபடியும் அந்த வைரத்தை திரும்பி பார்க்கவேண்டும் என்ற அவாவை அவனால் தட்ட முடியவில்லை. அதை மணிபர்ஸிலிருந்து எடுத்து கையில் வைத்துக்கொண்டு பார்க்கும் ஆனந்தத்திலேயே மனம் லயித்திருக்கும் பொழுது யாராவது தன்னைப் பார்க்கிறார்களோ என்று திரும்பிப் பார்த்தவுடன் அவன் திடுக்கிட்டான். வாசல் ஜன்னலின் ஒரு கதவைத் திறந்து அதன் வழியாகத் தன்னைக் கூர்ந்து ஒரு செட்டியார் கவனிப்பதைக் கண்டு திடுக்கிட்டான். அப்பொழுதுதான் வாசல் ஜன்னலில் ஒரு கதவிற்குத் தாழ்ப்பாள் சரியாக பொருத்தவில்லை என்று ஞாபகம் வந்தது. ஒரு வேளை அவர் வைரத்தைப் பார்த்து விட்டாரோ என்ற சந்தேகம் அவனை வாட்டத் தொடங்கியது. ஒருவாறு மனதைத் திடப்படுத்திக் கொண்டு "யாரப்பா, நீ! உமக்கு என்ன வேண்டும்! இப்படித்தான் வாசல் கதவைத் தட்டாமல் மூடின ஜன்னல்கதவைத் திறந்து உள்ளே பார்ப்பது உம் வழக்கமா?" என்று ஒரு அதட்டல் போட்டான்.

"இல்லைங்க சாமி! கோவிச்சுக்காதேயுங்கோ! இரண்டு மூன்று தடவை கதவைத் தட்டினேன். உங்க

ளுக்கு காது கேட்கவில்லேங்க ! ஒரு கேஸுங்க,'' என்ருர் செட்டியார் தொந்தியைத் தடவிக் கொண்டு.

"இப்ப ஒன்றும் கேஸ் கீஸ் பார்க்க முடியாது. இரண்டு நாள் கழித்து வாரும்'' என்ருன் சரவணபவம்.

சரி யென்று அந்த செட்டியார் போய் விட்டார். செட்டியார் தன் கையிலிருந்த வைரத்தைப் பார்த்தாரா இல்லேயா என்று அவனுக்குப் புரியவில்லே. இந்த வைரத்தை தன் வீட்டிற்குக் கொண்டு போய் மறைவான இடத்தில், ஒரு வேளே தன் வீடு சோதனேபோடப் பட்டாலும் அகப்படக் கூடாத இடத்தில் வைப்பது நல்லது என்று அவனுக்குத் தோன்றியது.

இரண்டு நாள் கழித்து செட்டியார் ஆபீசுக்கே மறுபடியும் வந்தார்.

"வாருங்கோ செட்டியார்வாள்! அன்றைக்கு ரொம்ப ஜோலியாயிருந்துதுங்க. என்ன கேஸ் சொல்லும்! நல்ல வக்கீலாய் அமர்த்தித் தருகிறேன்'' என்ருன் சரவணபவம்.

அவன் கேட்ட கேள்விக்கு செட்டியார் சொன்ன பதில் அவனேத் தூக்கிவாரிப் போட்டது.

"கேசுக்கென்ன? அதிருக்கட்டும்! அந்த வைரமெங்கே?'' என்று செட்டியார் கேட்டார்.

"வைரமா! எந்த வைரம்? என்ன ஏதாவது சொப்பனம் கிப்பனம் கண்டீரா?'' என்று ஒரு போடு போட்டான் சரவணபவம்.

"சாமீ! நான் ஒன்றும் சொப்பனம் கிப்பனம் காணவில்லே. சுந்தரம் பிள்ளே ஒரு வைரம் கொண்டு வந்தார். அது எப்படி எனக்குத் தெரியும் என்று கேட்கலாம்? நானும் அவரும் ரெயிலில் சேர்ந்து வந்தோம். நான் வைர வியாபாரி என்று தெரிந்து கொண்டு அவர் தன்னிடமிருந்த வைரத்தைக் காண்பித்து அதன் விலே என்னவிருக்கக்கூடும்? என்று கேட்டார்?'' என்ருர் செட்டியார்.

"என்ன விலை சொன்னீர்?" என்று கேட்டான் சரவணன். இருபதனுயிரம் ரூபாய் என்று செட்டியார் வாயில் வந்தது. ஆனல் அதை அடக்கிக் கொண்டு "ஆயிரம் ரூபாய் என்று சொன்னேன். அந்த வைரத்தைச் சுந்தரம் பிள்ளை உம் வக்கீலிடம் கொடுத்தார். அதை உம் கையில் இரண்டு நாளைக்கு முந்தி பார்த்தேன். என்ன யோசிக்கிறீர்?" என்று செட்டியார் கேட்டார்.

"எனக்கு அந்த வைரத்தைப் பற்றி ஒன்றும் தெரியாது," என்று ஒரேயடியாக சாதித்தான் சரவணபவம்.

"சரி, நான் இப்பொழுது சொல்லுகிறதைக் கேளும். நீர் நிஜமாகவே அந்த வைரத்தை அப்பொழுதுதான் கண்டெடுத்தீர் என்று வைத்துக் கொள்ளும். நீர் உடனே போலீஸாரிடமாவது அல்லது வேணுகானமய்யர் மனைவியிடமாவது கொண்டுபோய் கொடுப்பீர் என்று நினைத்தேன். ஆனல் நீர் அப்படிச் செய்யவில்லை. நீர் அதை அப்படியே ஸ்வாஹா பண்ணிவிடப் பார்க்கிறீர். நான் இப்பொழுது நேராக போலீஸுக்குப் போய் 'சுந்தரம் பிள்ளை என்னிடம் ரெயிலில் ஒரு வைரத்தைக் காண்பித்தார். அந்த வைரம் உன் கையிலிருக்கிறது' என்று சொன்னல் சுந்தரம் பிள்ளையின் மரணத்திற்கு நீர்தான் காரணம் என்று ஏற்படலாம்; அல்லது சுந்தரம் பிள்ளை உன் வக்கீலிடம் கொடுத்த வைரம்தான் இப்பொழுது உன் கையிலிருக்கிறது என்று ஏற்பட்டால் நீர்தான் உம் வக்கீலைக் கொலை செய்தீர் என்று ஏற்படலாம். எப்படியிருந்தாலும் நான் போலீஸுக்குப் போனல் நீர் தூக்குமரத்தில் தொங்க நேரிடும். என்ன சொல்லுகிறீர்?" என்று செட்டியார் கேட்டார்.

சரவணபவம் அப்படியே ஸ்தம்பித்துப் போய்விட்டான். உலகம் தான்தான் வக்கீலை கொலை செய்திருக்க கூடும் என்று நம்பும் என்பதில் சந்தேகமில்லை.

"அதற்காக என்ன பண்ண வேண்டும்?" என்று கேட்டான்.

"ஒன்றுமில்லை. உமக்கும் எனக்கும் தான் அந்த வைரத்தைப் பற்றித் தெரியும். நாமிருவரும் அந்த வைரத்தை பங்கிட்டுக் கொள்ளுவோம். வைரம் ஆயிரம் ரூபாய்

தாளும். வைரத்தை என்னிடம் கொடும், நான் உமக்கு ஐந்நூறு ரூபாய் தருகிறேன்,'' என்றார் செட்டியார்.

தூக்குமரத்தில் தொங்குவதற்குப் பதிலாக கையில் ஐந்நூறு ரூபாய் கிடைப்பது சிலாக்கியமல்லவா? சரி யென்று சொல்லிவிட்டு விர்ரென்று வீட்டிற்குச் சென்று வைரத்தை எடுத்துக்கொண்டு செட்டியார் வீட்டிற்கு போனான். செட்டியார் இரும்புப் பெட்டியைத் திறந்து பணம் எடுத்துவர உள்ளே சென்றார். அப்பொ ழுது அவர் வீட்டைச் சுற்றி ஒருதரம் பார்க்கும்பொழுது ஆணியில் ஒரு ஷர்ட்டும் வேஷ்டியும் மாட்டியிருப்பதைக் கண்டான். அவனால் நம்ப முடியவில்லை. ஏன்? அந்த ஷர்டிலும் வேஷ்டியிலும் பச்சை மைக்கரைகள் நிறையக் காணப்பட்டன. அப்படியே அவன் புத்தி ஸ்தம்பித்து விட்டது. வைரத்தைக் கொடுத்துவிட்டு பணத்தை வாங் கும்பொழுது கூட அவன் புத்தி நிதானத்திலில்லை.

''சரவணபவம்? இந்த வைரவிஷயம் ஒருநாளும் வெளிவரக்கூடாது என்பது ஞாபகமிருக்கட்டும்,'' என்று செட்டியார் சொன்னார். அவர் வார்த்தைகள் அவன் காதில் ஏறவில்லை. ஐந்நூறு ரூபாய் பெரிசா அல்லது வேணுகானமய்யரை அநியாயமாய்க் கொலை செய்தவனை, ஏன், சுந்தரம் பிள்ளையைக் கொலை செய்தவனைக்கூட இருக்கலாம்—போலீஸிற்குக் காட்டிக் கொடுப்பது நியாயமா என்ற கேள்வி அவன் மனதைப் பளார் பளா ரென்று அறைந்தது. அவன் மனசாக்ஷியின் கவலை மீறி அவனால் நடக்க முடியவில்லை. நேராகப் போலீஸ் ஸ்டேஷ னுக்குப் போய் வேணுகானமய்யரை சுந்தரம் பிள்ளை பார்க்கவந்தது முதல் செட்டியார் தனக்குப் பணம் கொடுத்தது வரையில், அவர் ஷர்ட்டு வேஷ்டியில் பச்சை மைக்கரை பட்டிருக்கிற விஷயம் உள்பட ஆதியோடந்த மாகச் சொன்னான்.

பெயர் மாற்றம்

கே. ஸ்ரீ.

கடை ஆள் : ஏய், மன்னரு.

மன்னரு : (கொட்டாவி விட்டுக்கொண்டே) கூப்பிட்டாயா ?

கடை : வக்கீல் ஐயா, இருக்காரா ?

மன் : காலையிலே நீதான் புளப்பில்லாம அலயரேன்னு, எங்களையும் எங்கிட்டாவது திரியச் சொல்றயா ?

கடை : சரி, நிறுத்து, உள்ளேபோயி, நான் வந்திருக்கேன்னு சொல்லு.

மன் : நல்லவேளை, சொல்லுன்னு சொன்னயே. அவரை வெளியே இளுத்துக்கிட்டு வான்னு சொல்லாம.

கடை : சரி நானே அவரைப் பார்த்தாதான் நல்லது.

மன் : சுகமா போயேன். நான் என்ன, வளி மறிக்கிறேனா ?

* * *

வக்கீல் சதாசிவம் : யாரங்கே, காலை வேளையிலே.

கடை : நான்தான். தாண்டவராய பிள்ளை அனுப்பிச்சாரு.

சதாசி : அடடா ! இப்படி உட்காருங்க. காலையிலே காப்பி ஆச்சோ.

கடை : அதெல்லாம்.........

சதாசி : அப்படிச் சொல்லக்கூடாது. உம், பொன்னு, காப்பி பலகாரம் எதாச்சுமிருந்தா கொண்டாரச் சொல்லு.

கடை : அதெல்லாம் இருக்கட்டுங்க, வந்த விச யத்தை பார்க்கலாம்.........

சதாசி : நான் காத்துகிட்டு இருக்கேன். ரொம்ப நாள் சிநேகிதம். சின்ன பசங்க முதக்கொண்டு ஒரே வீட்டிலே குடியிருந்தோம். கிளாஸிலே எல்லாம் ஒரே மார்க்கு வாங்குவோம்.

கடை : உங்க பள்ளிக்கூடத்து சிநேகிதம் இருக்கட்டுங்க. ரொம்பநாளாச் சொல்லிக்கிட்டே வருரு. நானும்....

சதாசி : ஏன் இப்படி தயக்கம். நம்பகிட்ட வந்த கேசு ஒன்னுகூட சோடை இல்லீங்க.

கடை : அது இல்லீங்க......

சதா : சும்மா சொல்லுங்க. சும்மா சொல்லுங்க.

கடை : நான் வந்த விசயம் வேற.

சதாசி : நீங்க கொஞ்சங்கூட பயப்படவேண்டாம். எல்லாம் ஒரு வழியா தீர்த்திடுவேன்.

கடை : இல்லே. ரொம்ப பாக்கி விழுந்திடுச்சு.

சதாசி : என்ன, பாக்கியா ?

கடை : உங்களுக்கு இருக்கிற அலுவல்லே, ஞாபகம் எங்கே இருக்கப்போவுது.

சதா : நீங்க தாண்டவராய பிள்ளையிடமிருந்து வருவதா சொன்னீங்களே.

கடை : ஆமாம். அவுருதான்—மளிகக்கடை. நீங்க தரவேண்டிய பாக்கி 200 ரூபாய்க்குமேலே விழுந்திடுச்சுங்கோ.

சதா : என்ன ! இருநூறு ரூபாயா ?

கடை: இன்னும், ஒரு வாரத்திலே, பணம் வராட்டா, கோர்ட்டிலே தாவா போட்டுடுவேன், கண்டிப்பா சொல்லீடுன்னு, நம்பகிட்ட சொல்லிப்பிட்டாரு தாண்டவராய பிள்ளை.

சதா : கடக்காரப் பிள்ளையா ?

கடை: என்ன சொன்னீங்க? என்ன சொன்னீங்க? கடங்காரப் பிள்ளையா ?

சதா : இல்லெய்யா, இல்லே.

கடை : உண்டோ, இல்லேயோ. என் கடனை நான் களிச்சுப்பிட்டேன். அப்புறம் உங்க பொறுப்பு.

பொன்னு : என்ன அவுரு வேகமா போருரே ?

சதா : சரி, காப்பி ஆச்சா !

பொன்னு : காப்பியா ? அந்த கடங்காரன் இன்னும் பாலு கொண்டாறலே.

பாலு : (தூரத்திலிருந்து) யே, அம்மோ ?

பொ : வாடாப்பா, வா. உன் வரவைத்தான் எதிர் பார்த்துக்கிட்டிருந்தோம். எங்கேடா மாடு ?

சதா : அவனேயே கேக்கறயே ?

பாலு : அதைச் சொல்லீட்டு போகத்தான் வந்தேன்.

சதாசி : என்னடா பீடிகை போட்டுண்டு ஆரம்பிக்கறே. பால் எங்கேன்னு ?

பாலு : இனிமே பால் வராதுங்க.

சதாசி : ஆமாம். பால் வருமா ! நீதான் அதை எடுத்துக்கிட்டு வந்து ஊத்தணம்.

பாலு : நானும் சொல்லி சொல்லி பாத்தேன், இனிமே வராதுங்க.

சதா : என்னடா ? பாலுக்கு என்ன பஞ்சம் ?

பாலு : பால்பணம் கேட்டு கேட்டு என் வாயு வலிச்சுப்போச்சுங்க. பணம் பாக்கி கொடுத்தா ஒளிய இன்னியிலிருந்து பால் ஊத்தமாட்டேன்.

பொன் : எத்தனை படிக்கு பாக்கி ?

பாலு : நூறு படிக்குமேலே ஒடுமே.

பொ : ஒரு பிடிமானமா சொல்லு.

பாலு: நீங்க தரவேண்டிய பாக்கி பணம் வந்தா, நான் ஒரு மாடல்லா வாங்கிடலாம்.

சதா: நூறு படின்னு சொன்னியே. அதிலே பாதி தள்ளு.

பாலு: எங்கே?

சதா: என் அப்பா! குளா-தண்ணிக்கும்கூட காசா?

பாலு: அதை வாங்கும்போதே, எடுத்து தனியா வச்சிடனும். இப்போ சண்டை போட்டா!

சதா: சரி, நீ என்னதான் சொல்றே, சொல்லு.

பாலு: பாக்கி ரூபா ஐம்பது வரணுங்க. நான் உங்களோடே வம்பு பேச டைமில்லீங்க. மரியாதையா பணம்......

சதா: அதுக்கு ஒன்னும் அபாயம் வராது, சொல்லு, சொல்லு.

பாலு: சரி, பாக்கிக்கு என்ன சொல்றீங்க?

சதா: இன்னிக்கு பாலே ஊத்து.

பாலு: என் பாக்கிப் பணத்துக்கு வட்டியா? என் சாமி, இப்படி பண்றீங்க? பெரிய மனுசங்களே இப்படி பண்ணினா......

பொன்: என்னடா, ரொம்ப துள்றே? நீ இல்லாட்டி ஊரே அஸ்தமிச்சுப் போய்டுமோ?

சதா: அஸ்தமிக்கிறது சரி. காலே காப்பியிலே மண். அவ்வளவு தான்.

பாலு: அம்மா, ரொம்ப கோபிக்காதேங்க. உங்க கோபம் பாலுகிட்டே செல்லாது.

பொன்: நானும் பாக்கறேன். அவரு எவ்வளவு பெரியவரு. வக்கீல்னு பாக்காமே, மட்டு மரியாதை இல்லாமே, காலகண்டன் மாதிரி கத்தறுன். (சொடக்கி) ஒரு நொடியிலே ஆயிரம் பேர் கொண்டு வருவேன்.

208421

பாலு: நல்லா கொண்டு வாங்க. சுவமா குடியுங்க. நம்ம பணத்துக்கு வளி சொல்லிபிட்டு, ஒரு பால் பண்ணையே நடத்துங்களேன்.

பொன்: (அழுது கொண்டே) இவன் இப்படி பேசறான். நீங்க வாயை மூடிகிட்டு வேடிக்கை பாக்க றீங்களே.

சதா: என்னை என்ன செய்யச் சொல்றே. வேணும்னு நானும் கத்தறேன்.

பாலு: ஏன் சாமி, யார் கத்தறுங்க? ஹூம்...... யார் கத்தறுங்க? பாக்கி கேட்டா கத்தலா? ஒளுங்காப் பேசணும். கறந்த பாலுக்கு கறுரா பணத்தைக் கீளே வைக்கணும்.

பொன்: இதோ பார்! அதிகமா பேசாதே.

சதா: பொன்னு, உள்ளே போயேன்! இப்படி அடிச்சுண்டா, ஊரில்லே கூடிடும்.

பாலு: இப்பதான் கூடாமே யிருக்கா? ஊர்தான் சிரிக்குதே. இப்படி எல்லார் வாயிலும் மண்ணைப் போட்டா சிரிக்கவா செய்யும். அடிக்கவும் வரும்.

சதா: அப்பா! அடுத்த மாஸம் முதல் தேதி வா! தலையை அடகு வைச்சாவது உன் பணத்தை கொடுத் துடறேன்.

பாலு: அதுதான் சாமி நான் கேக்கறது. கையிலே பணம். வவுத்திலே பாலு.

சதா: நீ போ! நான் சொன்னதை மறந்துடாதே. முதல் தேதி.

பாலு: கடவுள் இருக்காரு போங்க.

சதா: ஏ பொன்னு, அவன் கிட்டே உனக்கு என்ன பேச்சு? நான்தான் வீட்டிலே ஒரு ஆண்பிள்ளை இருக் கேனே?

பொன்: ஆமாம். அப்படித்தான் நீங்க எப்போ தும் சொல்லிக்கிட்டே இருக்கீங்க.

சதா: அதோ, யார் வராங்க?

பொன்: இந்த வீட்டு சொந்தக்காரர் முதலியார் போலிருக்கே.

சதா: உம் பொன்னு. நீ தலை மறைவாயிரு. அவரும் வந்துட்டாரு.

முதலி: என்ன பிள்ளைவாள்.

சதா: உம்...ஏதோ இருக்கேன்.

முதலி: இருக்கேன்னு சொல்லிப்புட்டா, போதுமா பிள்ளைவாள்? இருக்கறதுக்கு நமக்கு யோக்யதை யிருக்கா, கௌரவம் இருக்கா, அந்தஸ்து இருக்கான்னு பாக்கவேணுமா?

சதா: நீங்க அதைப்பத்தி சந்தேகப்படவேணும்.

முதலி: சந்தேகப்படாம வைக்கவேண்டியது உம் பொறுப்பு. அந்த பொறுப்புக்கு மதிப்பு, ஒரு மவுசு. என்ன நான் சொல்றது.

சதா: சொல்றதிலே தப்பு ஒன்றுமில்லே.

முதலி: யோக்யதை இருந்தா இருக்கணும் என்ன, நான் சொல்றது.

சதா: நீங்க, நீங்க.........

முதலி: நான் ஒண்ணும் விகல்பமா பேசறதா, நீங்க நினைச்சுக்கப்படாது. என்ன, நான் சொல்றது? முடிஞ்சா இருக்கணும். இல்லாட்டி, என்ன......

சதாசி: நீங்க சொல்றது புரியல்லயே.

முதலி: அது சகஜங்க. இதெல்லாம் அவுங்க அவுங்களுக்கா தோணணும் என்ன?

சதா: வீட்டு வாடகை பாக்கியைப்பற்றி.

முதலி: அதானுங்க. முடிஞ்சா இருக்கணும். இல்லாட்டி குடிசையோ, குட்டிச்சுவரோ, எங்கெனச்சும் பதுங்கிக்கணும்.

சதா : நீங்க கோவப்படக்கூடாது. கொஞ்சகாலமா ரொம்ப தட்டல். எதிலே முனைஞ்சாலும் முறிஞ்சு போயிடுதுங்க. கொஞ்சம் பெரிய மனசு வைச்சு.....

முதலி : நம்மை கிளப்பாதீங்க? அப்படித்தானே? என்ன நான் சொல்றது.

சதா : புரிஞ்சுகிட்டேன். நாலு மாச வாடகை பாக்கி விளுந்திடுச்சு.

முதலி : விளுந்ததை கிளப்பரதில்லே சந்தேகமாயிருக்கு.

சதா : உங்களுக்கு கவலேயே வேணும். நீங்க போங்க. இன்னும் ஒரு வாரத்திலே தீத்துப்புடறேன்.

முதலி : அப்படித்தான் வாரா வாரமா மாத்திகிட்டே வரேங்க. உங்க பளய பாக்கியைக்கூட பைசல் பண்ணிடறேன். நம்ப வீட்டை காலி செஞ்சா போதும். என்ன நான் சொல்றது.

சதாசி : அப்படி யெல்லாம் கோவிச்சுக்காதீங்க. உங்களே ஒரு வழியா ஒழிச்சுப் பிடறேன்.

முத : இதுக்குத் தானு உங்களே என் ஊட்டிலே இத்தனே வருசமா வாடகைக்கு வச்சிக்கிட்டேன்?

சதா : தவறு நினைச்சுட்டீங்களே! வாடகை பாக்கி ஒன்னு மில்லாம செய்துடறேன். வரும்படி ரொம்ப தட்டு. யார் வீட்டைத் தேடிக்கிட்டு வராங்க? உங்க மாதிரி இரண்டு பேரு வந்தாத்தான்.

முதலி : சதாசிவம் பிள்ளே! நான் கத்தி கத்தித் தொண்டை வரண்டு போச்சு. நீங்க பழைய வாடகையைக் கூட தரவேணும் வீட்டைக் காலி பண்ணினு போதும்.

சதாசி : அப்படி கோபப் படாதீங்க. பணத்தை கொடுத்தூட்டு மறு காரியம் பாக்கறேன்.

முதலி : வீட்டைக் காலி பண்ணறது, முதக்காரியமா வச்சுக்கோங்க.

சதா: அப்படிச் சொல்லக் கூடாது. இவ்விடத்திலே கொஞ்சம் தயவு வைக்கணும்.

முதலி: நான் சொன்னது ஞாபகமிருக்கட்டும்.

சதா: மறக்க முடியுமா? ஊம்......

பொன்: இப்படி நமக்கு காலம் வந்தூடிச்சே.

சதா: நம்ப கிட்டே சொல்லிக் கிட்டா வரது? நம்ம சமையல் காரன் வருனே?

சமையல்: ஸார்......

சதாசி: என்னப்பா?

சமை: நான் நிக்கப்போறேன்.

சதா: உன்னே ஒருத்தரும் உக்காரச் சொல்லலேயே!

சமை: அப்படி இல்லீங்க. நான் இன்னிலிருந்து வேலேக்கு வர முடியாதுங்க. சம்பளம் நாலு மாஸமா வரல்லே. வேரடம் பாத்துகிட்டேன்.

சதாசி: அடக் கடவுளே! போர் முனேகள் மணிக்கு மணி முளேச்சு கிட்டே இருக்கே?

சமை: என் வவுரு ரொம்பிஞ போதுங்களா? என் பிள்ளே குட்டீங்க உசுரோடிருக்க வேணுமா?

சதாசி: அதுகளே யாரப்பா சபிக்கராங்க.

சமை: சபிக்கவும் வேணுமா? வவுத்திலே அடிக்கிறது போதாதா?

சதா: சரி, என்ன சொல்றே. தெளிவா சொல்லிப்புடு.

சமை: உங்க ஊட்டிலே கால் வைச்ச முதல் இன்னிக்கு வரை, சம்பளத்தைக் கண்ணுலே நான் காணல்லே. நான் நின்னுக்கறேன். வேறு யாராவது பாத்துக்கோங்க.

சதா: அதைப் பத்தி நீ என் கவலேப்படறே?

சமை: நமக்கு ரிலீப் வரமட்டும் தானே நமக்கு பொறுப்பு.

சதா : உனக்கு நான் ரிலீப் தரேன் போ.

பொன் : இன்னும் ஒரு மாசம் பொறு. எங்களுக்கு நல்ல காலம் வந்துடும்.

சமை : உங்க நல்ல காலம்தான் நான் விலகிக் கறேன், அம்மா.

சதா : சரி, தீர்மானமா உன் இஷ்டத்தைச் சொல்லி புடு.

சமை : இன்னியோடு நான் வேலேயி விருந்து நின்னுக்கறேன்.

சதாசி : ஊம், சரி.

சமை : நம்ப பாக்கி.........

சதாசி : என்ன புரோ நோட் எழுதித்தரச் சொல் றியோ?

சமை : இல்லா எப்போன்னு சொல்லு?

சதா : ஒரு தேதி பார்த்து குறிச்சுத்தரேன். அதிலே தவறும வந்து, பணத்தை வாங்கிண்டு போ.

சமை : உங்களோட வாதாட எனக்கு சக்தில்லே. நான் வரேன்.

சதா : கட்டாயம் வா......... ஊம்.........இவனும் ஒழிந்தான், யார் முகத்திலே முழிச்சமோ தெரியல்லே. எச்சரிக்கைக்கு எச்சரிக்கை மேலா வந்துண்டிருக்கு. ஊம். என்னதான் முடிவு? பார்க்கலாம்.

ஜோஸி : நமசிவாயம்! நமசிவாயம்!

சதாசி : யாரங்கே? நம்ப ஜோஸியர் போலிருக்கே.

பொ : போலிருக்கே என்ன? அவரே தான்.

ஜோ : என்ன பிள்ளேவாள், சுகம்தானே?

பொ : எல்லாம் இருக்கற இடத்திலே இருந்தா சுகம் தான்.

ஜோ : என்ன அப்படி அலுத்துக் கிட்டீங்க.

சதா : எல்லாம் பட்டாத் தெரியுங்க. சுருக்கமா ஒரு வழி சொல்லுங்க.

ஜோ : எதுக்கோ ?

சதா : இந்த உலகத்தை விட்டுட்டு போறதுக்கு.

பொ : துணிச்சலைப் பாரு! அப்புறம் நான் தனியா யிருக்கவா ?

சதா : நீயும் கூட வாயேன். நம்மை யார் தடுக்கறு ?

ஜோ : போதும் போதும், இந்த அசட்டுப்பேச்சு.

பொன் : உங்களுக்கு என்ன தெரியும் (அழுது கொண்டே) சூரியனேடே போட்டி போட்டு கிட்டு வராங்க கடங்காரப் பாவிங்க. ஏதோ பாக்கி யிருந்தா இப்படீங்களா நச்சுத் தள்ளணும். எனக்கு பிடிக்கில் லீங்க. இருந்தா சுவமா இருக்கணும். இல்லாட்டி டக் குண்ணு மறஞ்சூடணும்.

ஜோ : கொஞ்சம் பொறுங்கோ. இதோ ஜாத கத்தைப் பாக்கறேன்.

சதா : நமக்கு சீக்கிரம் உண்டான்னு பாருங்க.

ஜோ : லக்னுதிபதி கேந்திரம். பாக்யாதிபதி உச்சம். போராதத்துக்கு சுகாதிபதி சம்பந்தம். தன் வீட்டுக்கார ஞன குரு மேஷத்திலிருக்கும் பாக்யாதிபதியை—அதாவது சந்திரனைப் பார்க்கிருன்—போதாக் குறைக்கு, தற்போது நடப்பு சந்திர திசையில், குரு புத்தி. அடேடே கன்னி ராகுன்ன. சக்கப் போடு போடுமே.

சதா : ஆமாம். சக்கையாய் போட்டுண்டுதான் இருக்கு.

ஜோ : ஹாம்! இதோ பாருங்கோ. திவ்யமான திசை. அமோகமான காலம். அதிர்ஷ்டம் பொங்கி வரது. பொங்கி பொங்கி வரதுண்ண ?

சதா : பொங்கவேண்டாம், கொஞ்சம் சிந்தின போதும்.

ஜோ : பிள்ளைவாள்! உங்களுக்கு அடிக்கப்போற யோகத்தை என்னன்னு சொல்வேன்.

சதா : என் பேச்சு மூச்செல்லாம் நின்னுடுமோ?

ஜோ : நான் விளையாட்டா சொல்றதாக அவ்விடத்திலே நினைக்கறது தப்பு.

பொன் : யோகமா?...........ஐயரே! அவர் இப்ப படற பாடு எனக்கில்லா தெரியும்.

ஜோ : ரிஷப லக்ன ஜாதகத்தின் போக்கே அப்படித்தான் கவலைப்படாதீங்க. எல்லாம் பனியைக்கண்ட சூரியன்மாதிரி—இல்லே சூரியனைக்கண்ட பனிமாதிரி—காததூரம் பறந்துபோயிடும்.

சதா : அது பறக்கறது சரி, நான் பறக்கறதுதான் அதுக்குத் தெரியாது.

பொன் : எங்க கயிஷ்டம் வெடியுமா?

ஜோ : வெடியறதா? ஒரு பெரிய அதிர்ஷ்டம் ரொம்ப கிட்ட வந்துடுத்து பிள்ளைவாளுக்கு?

பொன் : நான் சொன்னு நம்பமாட்டீங்க. காலையில் இங்கே வந்து கூடிய கூட்டத்தைப் பார்த்தா இப்படி பேசுவீங்களா? கடங்காரங்க பிடுங்கல் பொறுக்கல்லே. உசுர் போய்ட்டா தேவல்லீங்க.

ஜோ : இதோ நன்னு பார்த்துச் சொல்றேன். (கை சொடக்கி) ஹாம்......தெரியுது.

பொன் : நல்லா தெரியுதுங்களா?

ஜோ : யோக காலம்தான். பிரமாதமான அதிர்ஷ்டம் ஒன்னு வரப்போறது நிச்சயம். ஆனுல் சந்திரன் பிரகாசத்தை ராகு கொஞ்சம் கவ்வப்பாக்கறது. அதனுலேதான் இந்த கஷ்டமெல்லாம்.

சதா : பரிகாரம் ஏதாவது......

ஜோ : உண்டு? இல்லாம?

பொ: சொல்லுங்க. அம்மன்தான் துணை செய்ய ணும்.

சதா: வீடு எதாவது மாத்தணுமா?

ஜோ: போதாது.

சதா: அப்புறம்?

ஜோ: பெயரே மாறணும்.

சதா: என்ன? என் பெயருங்களா.

ஜோ: கொஞ்சம் பெயர் மாறின விமோசனம் உண்டு.

சதா: இதுக்கென்னங்க பிரமாதம்.

ஜோ: நீங்களே கேளுங்கோ அவர் சொல்றதை.

பெயரைக் குறுக்கிடில்
பெருக்கிடும் பாக்கியம்
பீடித்த ராகுவும்
பீதியுடன் நகருமப்பா.
பிணிகளும் பியர்ந்திடும்
பணிந்திடும் சஞ்சலமும்
பறந்தோடும் பஞ்சு என
பற்றிய பாவங்களப்பா!

சதா: ஹி ...... ஹி ...... ஹி! அப்படின்ன, என் பெயரை சிவம்னு குறிக்கிட்டா?

ஜோ: கேள்வியென்ன? யோககாலம் வந்துடுத் துன்ன.

பொன்; நல்ல யோசனைதான். வாசலிலே சிவம்னு ஒரு போர்டையும் போட்டுடலாம். முதல்லே கடங்கா ரங்க பிடுங்கல் ஒழியும். கொஞ்சகாலத்துக்காவது ஒழியு மில்லே.

சதா: ஜோஸியர்வாள் உங்களுக்குக் கோடி புண் ணியமுண்டு. வயத்திலே பால் ஊத்தினப்போலே யிருக்கு.

ஜோ : இவர் வாயிலே வந்தா வந்ததுதான்...ஊம்... அப்புறம் வறேன். நீங்களே சொல்லுவேன். என்ன பிள்ளைவாள் வரேன்.

சதாசி : ஊம், ரொம்ப சந்தோஷம்.

பொன் : அடிக்கடி வந்துகிட்டிருங்க.

ஜோ : ஓ...பேஷா.

சதா : பொன்னு, மன்னுரைக் கூப்பிடு.

பொன் : மன்னுரு, ஐயா கூப்பிடருறு.

மன் : இதோ வரேம்மா.

சதா : மன்னுரு ! இதோ பாரு ! இனிமே நம்ப பேர் என்ன தெரியுமா ?

மன் : அவுங்க சொல்லி கூப்பிடறதா ?

சதா : எவங்கடா ?

மன் : அவுங்கதான். உங்களை கடங்காரன்னுதான் சொல்லிகிட்டு போறுங்க.

சதா : சீ, மடையா ! வாயை மூடு. ஊம். இனிமே நம்ப பேரு சிவம். வெறும் சிவம்.

மன் : புரிஞ்சுகிட்டேனுங்க.

சதா : யார் வந்து கேட்டாலும் என்ன சொல்வாய் ?

மன் : போய்ட்டாரு. இந்த வூட்டிலே இருக்கறது "வெறும் சிவம்" என்பேனுங்க.

சதா : பேஷ். முதல்லே வாசல்லே இருக்கற போர்டை எடுத்துட்டு.........

பொன் : அதை எங்கேயும் எறிஞ்சூடாதேப்பா. அடுப்பிலேயாவது போட்டு எரிக்கலாம்.

சதா : மன்னுரு ! இதோ பாரு முதல்லே ஒரு ஆளை கூட்டிகிட்டுவந்து, நம்பபேர் சிவம்னு சுவத்திலே எளுதச் சொல்லு.

மன் : செய்ரேனுங்க.

சதா : ஞாபகமிருக்கட்டும். யார் வந்தாலும், நம்ப பழைய பேரைச் சொல்லிப்புடாதே.

மன் : இல்லீங்க.

பொன் : இதுவும் நல்ல யோசனைதான்.

மன் : அப்பாடா ! பேரும் எழுதியாச்சு. இனிமே இந்த கடங்காரங்க புழுங்கல் குறையும்...ஊம்...யாருங்க வேணும் ?

அத்தை : ஏண்டாப்பா ! இந்த வீட்டிலேதான் வக்கீல் சதாசிவம் பிள்ளை இருக்காரு ?

மன் : இல்லீங்களே ?

அத் : அடடா ! பின்னே யாரு இங்கே இருக்காங்க.

மன் : சிவம் இருக்காரு.

அத் : சிவமாவது ! பிரம்மாவாவது ? சதாசிவம் பிள்ளை இல்லையா ?

மன் : இல்லீங்களே !

அத் : எங்கே யிருக்கார் தெரியுமா ?

மன் : தெரியாதுங்களே ...... ஆமா ...... நீங்க யாருங்க ?

அத் : என் தம்பி மகன் தான் சதாசிவம் பிள்ளை. அவன் அதிர்ஷ்டம் கொடுத்து வைக்கலே. அவ்வளவுதான். ம் ...... விடு வண்டியை.

வண்டிக்காரன் : இதோங்க—

சதா : மன்னாரு.

மன் : இதோ வந்துட்டேனுங்க.

சதா : மன்னாரு ! நான் வெளியிலே போயிருந்த போது யாராவது வந்தாங்களா ?

மன் : ஆமாங்க ...... ஒரு மணி நேரத்துக்குமுன்னே யாரோ ஒரு வயஸான அம்மாள் வந்தாங்க ...... உங்க

அத்தைன்னு கூட சொன்னுங்க. ஆனு நான் உள்ளே விட்டேனு? நீங்க இல்லவே இல்லேன்னு சொல்லிப் புட்டேன் .... "என்னமோ உங்களுக்கு அதிர்ஷ்ட மில்லே ...... அவ்வளவுதான் ......" அப்படின்னு சொல் விட்டு போயிட்டாங்க.

சதா: அடபாவி! என் தலையிலே கல்லேத்தூக்கிப் போட்டுட்டயே. அவ சொத்து பூராவையும் எனக்குன்னு எழுதி வைச்சிருந்தா. அட தெய்வமே! இனிமே அவளை நான் எங்கே தேடிப் பிடிக்கிறது!

பொன்: கடைசியிலே ஜோஸ்யர் சொன்னது சரி யாய்ப் போச்சு. சந்திரனை ராகு கவ்வியேபுடுத்து.

பாசரசு: 13

விசேஷ வெளியீடு

தீபாவளி யன்று வருகிறது

விலை ரூ. 2

நினைவிருக்கட்டும்

பாசரசு காரியாலயம்

பெரம்பூர் :: சென்னை

விளக்கு

"பாசரசு"

என் அறையில் சுவர்களில் படர்ந்திருந்த புகைக் கரியைப் போக்குவதற்காக வெள்ளையடிக்க ஏற்பாடு செய்தேன்.

"உன்னால்தான் இவ்வளவு சிரமம்; விளக்கை அப்பொழுதே அணைத்திருந்தால் இவ்வளவு சிரமம் இல்லையே," என்றேன் அங்கு வந்த என் மனைவியைப்பார்த்து.

"ஆமாம், போன காரியத்தைப் பற்றி திரும்பித் திரும்பி பேசி என்ன பயன்?" என்று கேட்டாள் சரசுவதி.

"அதற்கு மட்டு மல்ல; வெள்ளையடித்த பிறகு நீ என் அறையில் விளக்கை ஏற்றி வைத்துக்கொண்டு படிக்கக்கூடாது."

"ஏன்?"

"ஒவ்வொருதடவையும் என்னால் சுவர்களுக்கு வெள்ளை அடித்துக்கொண்டிருக்க முடியாது."

"படிப்பதற்கும் வெள்ளையடிப்பதற்கும் என்ன சம்பந்தம்? சரியாக விளக்கித்தான் சொல்லுங்களேன்."

"உன்னிடம் சிக்கனம் என்பது மருந்துக்குக்கூட கிடையாது. இப்பொழுது கிரோஸின் பஞ்ச மாச்சே; கால் புட்டி எண்ணெய்வாங்கிவர பத்துபுட்டிகள் உடைக்க வேண்டி யிருக்கிறதே என்பதும் உனக்குத் தெரிகிறதில்லை."

"சரி, சிக்கனம் தெரிகிறது; விஷயத்தைச் சொல்லுங்களேன்."

"நீ எப்பொழுது படித்தாலும் விளக்கின் வத்தியை அதிகமாக ஏற்றிவைத்துவிடுகிறாய். அறை பூராவும் ஒரே

புகை மயமாகப் போய் விடுகிறது. பிறகு ஒயிட்வாஷ் அடிக்க வேண்டியதாயிருக்கிறது."

"விளக்கைப் பெரியதாக ஏற்றிவைத்துப் படிப்பதால் சுவர்களுக்கு அடிக்கடி ஒயிட் வாஷ் அடிக்கவேண்டியிருக்கும் என்று சொல்லுகிறீர்களே; விளக்கை சிறியதாக ஏற்றிவைத்துப் படித்தால் கண் கெட்டுவிடாதா? பிறகு டாக்டருக்கு, நூறு இருநூறு கொடுக்கவேண்டியிருக்காதோ?"

"நீ எதற்காக இரவில் படிக்கிறாய்? பகலில் படித்துக் கிழித்தால் போதாதோ?"

"ஆமாம், நான் ஒன்றும் படித்துக் கிழிக்கவில்லை: ஒரு பத்திரிகாசிரியர் கதை வேண்டு மென்று கேட்டு அனுப்பி விட்டால், நீங்கள்தான் விளக்கை ஏற்றிவைத்துக் கொண்டு கதையைப்பற்றி யோசனை செய்து செய்து, ஆயிரத்தெட்டு தடவை எழுதிப் பார்த்து மேலே எழுத ஓடாமல் அதைக் கிழித்துக் கிழித்து வேஸ்ட் பேப்பர் பாஸ்கெட்டில் போடுகிறீர்கள். இந்தக் காகிதப் பஞ்சகாலத்தில் நீங்கள் இப்படி காகிதத்தை கிழித்துக் கிழித்துப் போடுவதைப் பார்த்தால் அரசாங்கத்தார் உங்களை டிபென்ஸ் ஆப் இந்தியா ரூல்ஸின்கீழ் அரெஸ்ட் செய்து விடுவார்கள். நான் கிழிக்கிறேனும்! நீங்கள் கிழிக்கிற காகிதத்தை யெல்லாம் கிழிக்காமல் போட்டாலும் விலைக்காவது போடலாம். கிழிக்காமல் போட்டால் உங்கள் கதையின் பிளாட்டை வைத்துக் கொண்டு யாராவது கதை எழுதிவிடுவார்கள் என்று சொல்லுகிறீர்கள். உங்கள் பிளாட்டைத் திருடி ஒருத்தன் கதை எழுதுவான் என்று என்புத்திக்குப் படவில்லை."

"என்னை அரசாங்கத்தார் அரெஸ்ட் செய்தால் உனக்குத் திருப்திதானே; இந்த கஷ்டமெல்லாம் பிறகு நேராதே! உன் இஷ்டப்படி விளக்கு வைத்துக்கொண்டு படிக்கலாமே!"

"பாருங்களேன், எதற்காக நான் சொல்வதில் குற்றம் கண்டு பிடிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்

கிறீர்கள்! பேச்சு உபமானத்துக்காகச் சொன்னால் அதை உண்மை என்று எடுத்துக் கொள்ளுகிறீர்களே!"

"இல்லாவிடில் நான் ஜெயிலுக்குப்போகிறேனென்றால் நீ உருகிப்போய் விடுவாயாக்கும்!"

"இதோ பாருங்கோ, இதுமாதிரி யெல்லாம் தாறுமாறாகப் பேசக்கூடாது. நான் உங்களை விட்டு இரண்டு நிமிஷங்கள் பிரிந்திருப்பேனா? நீங்களே யோசித்துப் பாருங்களேன், எனக்கு உங்கள்மீது எவ்வளவு அன்பு இருக்கிறதென்பதை. அதுதான் நீங்கள் எழுதுகிறீர்களே உங்கள் கதைகளில்...அவளுடைய அன்பு இமயமலை போன்றது, பஸிபிக் மகாசமுத்திரம் போன்றது, இல்லை, அவளுடைய அன்புக்கு வரம்பே கிடையாது....இன்னும் என்னென்னமோ எழுதுகிறீர்களே கற்பனையிலே...... ஆனால் நான் வைத்திருப்பது உண்மையான அன்பு...நான் சொல்வதைக் கேளுங்கோ. நான் வேண்டுமானால் இனி இரவில் படிக்க வில்லை. நீங்களும் இரவில் படிப்பதோ எழுதுவதோ வேண்டாம். அப்பொழுது கிரோஸினும் மிச்சம்; ஒயிட்வாஷும் அடிக்க வேண்டியதில்லை!"

"அப்படியானால் நான் எப்பொழுதுதான் கதை எழுதுவது?"

"இரவெல்லாம் விளக்கை யேற்றி வைத்துக்கொண்டு என்ன கதை எழுதலாம் என்று யோசித்து யோசித்து எழுதிய கதையைக் கிழித்துப் போடுவதற்குப் பதிலாக விளக்கை ஏற்றாமலே இருட்டில் இருந்து கொண்டு நன்றாக யோசனை செய்து கதையை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்து விடுங்கள். பிறகு பொழுது விடிந்ததும் அதை அப்படியே எழுதிவிடலாம். காகிதமும் மிச்சமாகும். இரவில் உங்கள்பாட்டில் ஒரு மணி இரண்டு மணிவரையில் விளக்கை வைத்துக்கொண்டு எழுதுவதால் விளக்கின் வெளிச்சம் சதா என் கண்களை உறுத்துகிறது. சரியான தூக்கம் கிடையாது? சரியான தூக்கம் இல்லாததால் உடம்புவேறு இளைத்துப்போகிறது. விளக்கு இருந்தால் இந்த கொசுவின் உபத்திரவம் வேறு அதிகமாகியிருக்கிறது. இதனால் மலேரியா, பைலேரியா எல்லாம் வந்து விடும்."

"எனக்கு இரவில்தான் எழுதமுடியும். பகலில் எழுத வராது."

"சரி, அதற்கு நான் ஒரு யுக்திசொல்லித் தருகிறேன். அப்பாவிடம் சொல்லி வீட்டுக்கு எலெக்ட்ரிக் லைட்டு போட்டுவிடச் சொல்லுகிறேன். அதற்கு ஆகிற செலவை நீங்கள் கொடுத்து விடுங்கள்."

"எப்படியும் செலவுக்குத்தான் வழிகாட்டுகிறாய்..."

"செலவு செய்யாமல் எந்த காரியம்தான் நடக்கும்?"

அதோடு அன்று பேச்சு முடிந்தது. இரண்டு நாளாக சரசுவதி எலெக்ட்ரிக் விளக்குகள் போட்டுத் தானாகவேண்டும் என்று ஒற்றைக்காலில் நின்றாள். வாய்ப் பேச்சோடு இருக்கட்டும் என்று ஒரு நாள், "சரிபார்க்கலாம்" என்று சரசுவதியின் நிர்ப்பந்தத்தின்மேல் சொன்னேன். ஒரு வாரம் கழிந்தது. ஒரு நாள் மாலை நான் ஆபீஸிலிருந்து வீடுதிரும்பிய பொழுது திகைத்துப் போய் விட்டேன். எலெக்ட்ரிக் விளக்குகள் போடவேண்டியதற்கான சாமான்கள் எல்லாம் கூடத்தில் குவிக்கப்பட்டிருந்தன.

"என்ன, சச்சோ, இவைகளெல்லாம்?" என்று கேட்டேன்.

"என்ன ஒன்றும் தெரியாதவர்கள் மாதிரி பேசுகிறீர்களே? எலெக்ட்ரிக் விளக்குபோட நீங்கள்தானே சம்மதித்தீர்கள்!"

"நான் எப்போது சம்மதித்தேன்?"

"என்ன, ஹரிச்சந்திரன் வீடு உங்கள் வீட்டுக்கு எதிர்வீடா, அல்லது பக்கத்துவீடா? நீங்கள் 'சரி' என்றீர்களே!"

"சரி, பார்க்கலாம், என்று சொன்னேனே யொழிய விளக்குகளைப் போடச் சொல்லவில்லையே! இதெல்லாம் எப்படி ஏற்பாடு செய்தாய்?"

"நீங்கள் 'சரி' என்று சொன்னதும், அன்றே அப்பாவுக்குக் கடிதம் எழுதினேன். அப்பா எலெக்ட்ரிகல் என்ஜினியரிடம் உத்தரவு வாங்கிக் கொண்டு இந்த சாமான்களையும் இரண்டு ஆள்களையும் அனுப்பி

யிருக்கிறார். சமையலறைக்குள் போய் பாருங்கள் ; வேலை நடக்கிறது!"

"சமையலா?"

"இல்லை; விளக்கு போடுகிறார்கள்."

"ஓஹோ, உன் டிபார்ட்மெண்டை முதலில் கவனித்துக் கொண்டாயா?"

"போங்கோ, நீங்கள் அர்த்தமில்லாமல் பேசுகிறீர்கள்? எங்கே முதலில் போட்டாலென்ன? வீடு பூராவும் போட்டபிறகுதானே மெயினோடு கனெக்ட் செய்யப் போகிறார்கள். உங்கள் அறையில் எங்கெங்கே விளக்கு போடச் சொல்லுவீர்களோ என்றுதான் நேரத்தை வீணாக்காமல் நீங்கள் வருவதற்குள் சமையலறைக்குள் போடச் சொன்னேன்."

"உம்?"

"விளக்குகளை எங்கெங்கே எப்படி யெப்படி அமைக்க வேண்டுமென்பதை நான் ஒரு காகிதத்தில் குறித்து வைத்திருக்கிறேன். அதைப் படிக்கிறேன். பிறகு உங்கள் மேலான யோசனைகளைச் சொல்லுங்களேன்."

"என்னுடைய யோசனைகளா மேலானவை?"

"சரி, சொல்லுகிறேன், கேளுங்கோ......

"சமையலறையில் அடுப்புக்கு நேராக மேலே ஒரு விளக்கு வேண்டும். உலையில் எவ்வளவு தண்ணீர் இருக்கிறது, வாணலியில் எவ்வளவு எண்ணெய் விட்டேன் என்பதெல்லாம் தெரியும். சாமான் வைத்திருக்கிற அலமாரியில் ஒன்று...இது மிகவும் முக்கியம். போன மாசம் இருட்டில் குழம்புக்கு மிளகாய்தூள் போடுவதற்குப் பதிலாக மஞ்சள் தூளைப் போட்டுவிட்டு.........அப்படி நேராம லிருக்கவேண்டுமானால் இங்கு விளக்கு அவசியம், அதோடு தேள், கரப்பான் இவையெல்லாம் அலமாரியில் சேராது. சமையலறையில் உள்ள விளக்குகளுக்கு ஸ்விட்ச் வெளியேயிருக்கவேண்டும். ஒவ்வொரு நாளைக்கு நடு இரவில் எழுப்பி என்னைக் குடிப்பதற்குத் தண்ணீர் கொண்டுவரச் சொல்லுகிறீர்கள். இருட்டில் சமைய

லறைக்குள் நுழைவதற்குப் பயமாக இருக்கிறது. வெளியே ஸ்விட்சை வைத்தால் விளக்கைப் போட்டு விட்டு பிறகு உள்ளே போகலாமல்லவா? இதுபோலவே நம்முடைய அறையிலிருந்து சமையலறையில் வரையில் பத்தடிக்கு ஒரு விளக்கு போடவேண்டும். அடுத்த பத்தடியில்வரும் விளக்குக்கு இங்கேயே ஸ்விட்ச். ஸ்விட்சை அழுத்திக்கொண்டே சமையலறைக்குப் போகலாம். பூஜை அறைக்குக் குறைந்தது பத்துவிளக்காவது வேண்டும். ஒவ்வொரு படத்தின்மேலும் ஒரு விளக்கு இருக்க வேண்டும்......பூஜையறையில் ஒரு விளக்கு மட்டும் சதா இரவும் பகலுமாக எரிந்துகொண்டிருக்க வேண்டும்.''

"குழந்தையின் தொட்டிலுக்கு மேல், ஒரு சிவப்பு விளக்கும் அதைச்சுற்றிப் பலவர்ண விளக்குகளும் இருக்க வேண்டும் சிவப்பு விளக்குக்குத்தனி ஸ்விட்ச் வேண்டும்.''

"இது எதற்கு?''

"நிர்மல் அழும்போதெல்லாம் இந்தப் பலவர்ண விளக்குகளைப் போட்டு காண்பித்து சிரிக்க வைக்கலாம் அவன் தூங்கிவிட்ட பிறகு வர்ண விளக்குகளை அணைத்து விட்டுச் சிவப்பு விளக்கைப் போட்டுவிட வேண்டும். குழந்தை இருட்டில் தூங்கக் கூடாது அல்லவா? அதுவும் சிவப்பு விளக்கின் வெளிச்சம் குழந்தையின் கண்களை உறுத்தாது.''

"உங்கள் அறைக்கு ஒரு விளக்கு. அது உங்கள் மேஜைக்குமேல் தொங்கவிடலாம். அல்லது மேஜயில் பொருத்திவிடலாம். கட்டிலின் தலைமாட்டில் ஒரு விளக்கு. நான் ஏதாவது அவசரமாகப் படிக்கவேண்டியிருந்தால், நான் படுத்துக்கொண்டே படிக்கலாம் பாருங்கள்...... கூடத்திற்கு ஒரு விளக்கு போதும். அதன் ஸ்விட்சை தரையிலிருந்து இரண்டு மூன்று அடி உயரத்தில்வைத்து விட வேண்டும்.''

"ஏன்?''

"சௌதாமினிக்கு விளக்கைத் தானாகவே போட வேண்டுமென்று ஆசை இருக்காதா? அவளுக்காக அந்த ஒரு ஸ்விட்ச் மட்டும் தரையிலிருந்து மூன்று அடி உயரத்

தில் வைக்கவேண்டும்! நம்முடைய கட்டிலின் மேலும், நாம் சாப்பிடும் இடத்திலும் விசிறிகள் வேண்டும்...

"நான் எழுதுகிற இடத்தில் விசிறிவேண்டாமா?

"நீங்கள் எழுதிக்கொண்டிருக்கும் பொழுது நான் கட்டிலில் படுத்துக்கொண்டிருப்பேனல்லவோ, அப்பொழுது விசிரியைப் போட்டுவிட்டால் அதிலிருந்து உங்களுக்குக் கொஞ்சம் காற்று அடிக்கும். அதோடு முக்கியமாக ஒன்றை கவனிக்கமறந்து விட்டீர்களே! விசிறி உங்கள் மேஜைக்குமேல் இருந்தால் நீங்கள் எழுதும் காகிதம் பறந்து கொண்டே இருக்கும்...... பிறகு அது கதை எழுதுவதற்கு இடைஞ்சலாக இருக்கும்......"

"ஆமாம், இவ்வளவும் போட்டால் கட்டுப்படியாகுமா?"

"அதற்காகவே சில சிக்கன வழிகளைக் கண்டுபிடித்திருக்கிறேன். உங்கள் மேஜைமீது வைக்கப்போகும் விளக்கின் ஸ்விட்ச்சை கட்டிலுக்குப் பக்கத்தில் வைத்துக் கொள்ளப்போகிறேன். நீங்கள் கதை எழுதுவதை நிறுத்திவிட்டு யோசனை செய்யும் பொழுது விளக்கை அணைத்துவிடுவேன். திரும்பவும் நீங்கள் எழுத எத்தனிக்கும்போது 'உம்' கொட்டினீர்களானால் விளக்கைப் போடுவேன். திரும்பவும் யோசிக்கும் பொழுது அணைத்து விடுவேன்."

நான் பதில் சொல்லவில்லை.

"என்ன நான் கேட்கிறேனே?"

"இவைகளையெல்லாம் கேட்டபிறகும் எனக்கு மூர்ச்சை போடாதது அதிசயம்தான்!"

"என்ன? ஏன் முகம் தொங்கி விட்டது?"

"உன்னுடைய பிரேரனைகள் அனைத்தும் நிராகரிக்கப் பட்டன."

"ஏன்?"

"இந்த வீட்டில் மொத்தம் பத்து விளக்குகளுக்கு மேல் வேண்டியதில்லை," என்று சொல்லிவிட்டு சரசுவதியின் பதிலைக்கூட எதிர்பார்க்காமல் நேரே சமையலறைக்குச் சென்றேன்.

208421

வருகிறது!

U.R. ஜீவரத்னம் நடிக்கும்

என் மகன்

டைரக்ஷன்:
R.S. மணி
வசனம்:
..சாமி...
பாட்டு:
பாபநாசம் சிவன்.
C.A. லெக்ஷ்மணதாஸ்
ஸ்டுடியோ:
சென்டிரல்
ஸ்டுடியோஸ்
.. கோவை ...

★

JUPITER PICTURES

ஜூபிடர்
- ரிலீஸ் -

ஜூபிடர் பிக்சர்ஸ் சர்க்யூட் ... மதராஸ்

P.S.H Co W A Menon

பி.எ. ராஜு செட்டியார் & பிரதர்

தந்தி: ராஜா — கோயமுத்தூர் — போன். 218A.